சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 3	இதழ்: 7	டிசம்பர் - 2021	விலை - ரூ.10/-
VOL:3	ISSUE: 7	DECEMBER - 2021	Rs. 10/-



சித்தர் ஜோதி
ஸ்ரீ கோரக்கர் சித்தர்

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு-3 மலர்-7 டிசம்பர் - 2021

வெளியிடுபவர் / ஆசிரியர்

V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்

திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு

திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்

திருமதி. S.சாந்தி, சென்னை.

திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.

திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.

திரு. B.முருகன், சோழவந்தான்.

செல்வி. S.சௌம்யா, சென்னை.

இதழ் வடிவமைப்பு

சிகரம் பப்ளிகேஷன்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்

எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி, அயனாவரம், சென்னை 600 023.

செல்: 99418 16692,88258 31068.

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.



என் அன்பு குழந்தாய்!

எந்த ஒரு சூழ்நிலையிலும் செய்த தவறை மறைக்க அடுத்தவர் மீது பழி போடாதே. முடிந்தவரை செய்த தீங்கை ஒப்புக்கொண்டு மன்னிப்பு கேட்டு விடு. சம்பந்தப்பட்டவர் ஏற்கவில்லை என்றாலும் பரவாயில்லை.

எவரையும் உயர்த்தி பிடிப்பதால் எவரும் உயர்ந்து விடுவதுமில்லை தாழ்த்தி பேசுவதால் எவரும் தாழ்ந்து விடுவதும் இல்லை.

நீ உன்னுடைய ஆற்றலையும் கடமைகளையும் ஒழுங்காக செய் நீ எதையாவது மாற்ற விரும் பினால், முதலில் அந்த என்னத்தை மாற்று. நீ மாறாமல் எதுவும் மாறாது.

நம்பிக்கையுடன் கூடிய முயற்சி எப்போதும் தோல்வியடைவதில்லை.

எளிய வாழ்க்கையும், உயர்ந்த சிந்தனையும். இருந்துவிட்டால் எப் போதும் மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது.

"அன்பு" செலுத்தினால் மனிதன். "இரக்கம்" கொண்டால் புனிதன். எனவே, கவலை கொள்ளாதே, கலங்காதே, நான் இருக்கிறேன் நிழலாக என்றும் உனக்காக.

- பகவான் ஸ்ரீ சாயிபாபா

ஆசிரியர் பக்கம்...



அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

சற்குரு சாயிநாதரின் அருளால் நாற்பத்து ஒன்றாவது இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 07.11.2021 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு நமது ஸ்ரீ சாய்ராம் ஆத்ம ஞான சபையில் (17/7A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி, அயனாவரம், சென்னை23) நடைபெற்றது.

இம்மாத இதழை "நியூ ஈரா கார்மென்ஸ்" அதிபர் திரு. அகஸ்டின் அவர்கள் வெளியிட, அன்பு நண்பர் திரு.சாந்த மூர்த்தி அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப்பித்தனர்.

தொடர்ந்து மழை பெய்து கொண்டிருந்தமையால் பக்தர்கள் வர முடியாத சூழல் இருந்தது. இருப்பினும் பல தடைகளுக்கிடையே சேலத்தில் இருந்து அன்பு அண்ணன் கலியன் சாய் அவர்கள் வந்திருந்து விழாவில் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்.



மேலும் அடாத மழையிலும், விடாது வந்திருந்து விழாவில் கலந்து கொண்ட பாபா பக்தர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

நமது "சாய் தியானா" பிரார்த்தனை மன்றத்தில் பதிவு செய்திருந்த நமது அன்புச் சகோதரி திருமதி திலகம் அவர்களின் அன்பு மகள் திருமதி சுசீலா அவர்களுக்கு பகவான் பாபாவின் ஆசியால் தீபாவளி அன்று சுகப் பிரசவத்தில் ஆண் குழந்தை பிறந்ததற்கு சகோதரி திலகம் அவர்கள் நன்றி செலுத்தினார்கள்.



அதே போன்று அன்புச் சகோதரி சாந்தியின் அன்பு மகள் சௌம்யா அவர்கள் நீட் தேர்வில்

வெற்றி பெற்றிருக்கின்றார்கள். அவர்களுக்கு மருத்துவ சீட் கிடைத்து மருத்துவ படிப்பை தொடர பாபாவிடம் நன்றி கூறி பிரார்த்தனை செய்தார்கள்.

நாட்டில் நிலவும் பல்வேறு பொரு ளாதாரக் குளறுபடிகளால் நமது பத்திரிக்கை அச்சாகும் மூலப் பொருளாகிய காகிதம் விலை கடுமை யாக ஏறிவிட்டது. நமது இதழ் ஏறக் குறைய தமிழ்நாட்டில் இருக்கும் முக்கியமான பாபா ஆலயங்களுக்கு இலவசமாகவே அனுப்பி வைக்கப்ப டுகின்றது. யாரிடமும் யாம் இதுவரை காணிக்கை பெற்றதில்லை.

பாபாவின் ஏற்பாட்டின்படி ஒரு சில புனித ஆன்மாக்களின் உதவியால் பாபாவின் செய்திகளை தாங்கி நமது இதழ் தொடர்ந்து வெளிவந்து கொண்டு இருக்கின்றது. இனியும் தடங்கல்கள் ஏதும் இன்றி தொடர்ந்து வெளிவர பாபாவின் பக்தர்களாகிய நீங்கள் உங்களால் முடிந்த காணிக்கையை அனுப்பி இப்புனிதக் காரியத் திற்கு உதவுமாறு இருகரம் கூப்பி பணி வன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.





வந்திருந்த பக்தர்கள் அனைவ ருக்கும் சாய் தியானாலயாவின் அன்ன தானக் குழுவினர் அன்ன பிரசாதம் வழங்கினார்கள். இதழ் வெளி யீட்டை ஒட்டி ஏழை எளியவர்களுக்கு அவர்கள் இருக்கும் இடம் தேடிச்சென்று அன்னதானம் அளிக்கப்பட்டது.

பகவான் சாயிநாதரின் அருளால் மிக விரைவில் உலகெங்கும் பரவி யிருக்கும் பெருந்தொற்று கட்டுக்குள் வந்து உலக மாந்தர்கள் அனைவரும் நிம்மதியுடனும், ஆரோக்கியத்துடனும், வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம்.

மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்!

வாழ்க வளமுடன்!

வாழ்க வையகம்!

தியாக தேவதை "ஊர்மிளா"

ராமாயணத்தில் வரும் *ஊர்மிளா* என்ற கதாபாத்திரத்தின் பெருமைகளை பற்றி நிறைய பெருக்கு தெரியாத அரிய தகவல்களை அறிவோம்.புராணகதைகளில் தங்களோட பங்களிப்பு, தியாகம், வலி, வேதனை ஆகியவை வெளிச்சத்துக்கு வராத நிறைய கதாபாத்திரங்கள் இருக்கு.

ராமாயணத்தில் வரும் ஊர்மிளா என்ற கதாபாத்திரத்தின் பங்களிப்பு, தியாகம், வலி, வேதனை ஆகியவற்றை பார்க்கலாம். ராமாயணத்தில் ராமன்சீதையின் பிரிவு, லட்சுமணனின் தியாகம், பரதனின் அன்பு, குகனின் நட்பு, அனுமனின் பக்தி... இப்படி பல பாத்திரங்கள் பேசப்பட்டுள்ளது.

அவ்வளவு ஏன்?! நெகட்டிவ் கேரக்டர் களான ராமனை காட்டுக்கு அனுப்பிய கைகேயி, எதிரி ராவணன், அவன் தம்பி விபீஷ்ணன், ராவணனின் மனைவி மண்டோதரி, வாலியை பற்றியெல்லாம் சிலாகிக்கும் ஆட்கள் உண்டு.

ஆனால் ராமாயண கதைக்காக பலர் செஞ்ச தியாகத்தைவிட ஊர் மிளா, செஞ்ச தியாகம் அதிகம். ஊர்மி ளாவை பொறுத்தவரை எல்லாமே திணிக்கப்பட்டவையே! ஆனாலும் அதிகம் பேசாமல் எல்லாவற்றையும் ஊர்மிளா ஏற்றுக்கொண்டாள்.

ராமாயணத்தில் சீதாதேவி பூமியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட பெண். சீதாதேவி அரண்மனைக்கு வந்த ஒரு வருடம் கழித்து பிறந்தவள்தான் இந்த ஊர்மிளா.

ஆம் ஜனகர்சுனைனா தம்பதியின் மூத்தமகளே இந்த ஊர்மிளா.

ஆனால் மிதிலையின் இளவரசி மைதிலி, விதேக நாட்டின் இளவரசி வைதேகி, ஜனகனின் மகள் ஜானகி என நியாயமாய் தனக்கு வரவேண்டிய பட்டங்கள் அனைத்தும் வளர்ப்புக் குழந்தை சீதைக்கு சென்றதை பற்றி அவள் சிறிதளவும் கவலைப்பட்டதே இல்லை.

ராமனை பார்த்ததும் சீதைக்கு ராமன்மேல் காதல் உண்டானது. திர்மணம் நடைபெற்றது. சீதையின் சகோதரிகளான ஊர்மிளா, மாண்டவி மற்றும் ஸ்ருதகீர்த்திக்கும் முறையே லட்சுமணன், பரதன் சத்ருக்கனுக்கும் திருமணம் நடந்தேறியது.

அவர்களை, தந்தைக்கும், சகோ தரிக்காகவும் திருமணம் செய்துக்கிட்டாலும் ஊர்மிளாவும் மற்ற சகோதரிகளும் தமது கணவர்களுடன் மனமொத்துதான் வாழ்ந்து வந்தாங்க.

அதிலும், இரண்டாமிடத்தில் இருக்கும் ஊர்மிளாவுக்கு இரண்டாமிடத்தில் இருக்கும் லட்சுமணனுடன் திருமணம்.

அவனும் தன் இரண்டாமிடம் பற்றி வருத்தப்படாதவன் என்பதால் இருவருக்கும் இயல்பாகவே ஒத்துப்போனது.

மனசு ஒத்துப்போனால் மகிழ்ச்சிக்கு குறைவேது? மனசுக்குள் காதல் இருந்தாலும் ஒருபோதும் ஊர்மிளாவோடு லட்சுமணன் இணைந்தானில்லை.

ராமனுக்கு ஊழியம் செய்வதிலேயே லட்சுமணனனுக்கு வாழ்நாட்கள் கழிந்தது.

சிறந்த பதிவிரதையான ஊர்மிளா குணநலன்களில் சிறந்து விளங்கியதால் நடக்கப்போகும் நிகழ்ச்சிகளை முன்கூட்டியே அறியும் திறனை தன் பூஜை, விரதங்களால் அடைந்திருந்தாள்.

ஊர்மிளாவிடமிருந்தே பல விரதமுறை களையும், சுமங்கலித்துவம், கணவன் மற்றும் குடும்பங்களை காக்கும் ரட்சா காப்பு சக்திகளை அடை யும் வழிமுறை களையும் சீதை கற்றுக்கொண்டாள். அப்படி ஊர்மிளா சொல்லித்தந்த விரத முறைகளே அசோகவனத்தில் சீதைக்கு அரணாய் நின்று அவளை காத்தது.

திருமணம் முடிஞ்சு அயோத்தி யில் எல்லாரும் சந்தோசமாய் வாழ்ந்த காலத்தில் ராமனுக்கு பட்டாபிஷேகம் செய்விக்க தசரதன் விரும்பி நாள் குறித்தான்.

பரதன் 14 வருடம் நாடாள, ராமன் 14 வருடம் காட்டுக்கு போகனும்ன்னு கைகேயி வரம் கேட்க தசரதனும் அவ்வாறே வரம் கொடுக்க, தந்தை சொல் மீறாத ராமன் காட்டுக்கு செல்ல, அவனோடு செல்வதே பதிவிரதைகான நியதின்னு சீதாதேவியும் உடன் கிளம்ப, அண்ணன் இல்லாத இடத்தில் இருக்கமாட்டேன் என லட்சுமணனும் கைகேயிடம் சூளுரைத்து காட்டுக்கு கிளம்ப ஆயத்தமானான்.

கோவத்துல வார்த்தைகளை விட்டுட்டு, அப்புறமா யோசிப்பவங்க அதிகம்.

அதுமாதிரி மனைவி ஊர்மிளா என்ன சொல்வாளோ?! தன்னோடு வருவேன்னு சீதாதேவி ராமருடன் புறப்பட்டமாதிரி கிளம்பிடுவாளோ!

அவள் வந்தால் ராமசீதாவை சரிவர கவனிக்க முடியாதேன்னு உள்ளம் கலங்கியபடி தன்னோட அறைக்கு லட்சுமணன் வர்றார்.

அங்க ஊர்மிளையை கண்டதும் அவருக்கு தூக்கிவாரி போட்டது.

ஏன் என்றால் சர்வ அலங்காரத்துடன்



மஞ்சத்தின்மேல் எழிலாய் படுத்தினுந்தாள் ஊர்மிளா.

ராமர் காட்டுக்கு போவதை நினைத்து ஊரே கலங்கி நிற்க, இவள் இப்படி இருக்கிறாளே என கடுங்கோபம் கொண்டு ஊர்மிளாவை தகாத வார்த்தையால் பேசினான் லட்சுமணன்.

காட்டுக்கு லட்சுமணன் போகக் கூடாதென ஊர்மிளா வாதிட்டாள்.

தசரதன் ராமரை காட்டுக்கு போகச் சொல்ல, ராமர் காட்டுக்கு போவது மகன் தந்தைக்காற்றும் உதவி. ராமரோடு சீதா காட்டுக்குபோவது அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை. நீங்கள் ஏன் அவர்களோடு போகிறீர்கள்?!

உங்களை ஒன்றும் தசரத

கைகேயி காட்டுக்கு போகச்சொல்லவில்லையே!

தன்னோடு வரச்சொல்லி ராமசீதா அழைக்கவில்லையே. பிறகு எதற்கு காட்டுக்கு போகிறீர்கள்? என ஊர்மிளா வாதிட்டாள்.

ஆனால், அவள் பேச்சைமீறி லட்சுமணன் கிளம்புகிறான். ஆரத்தி எடுத்து. கணவனை வழியனுப்ப முன்வரும்போது, தன் காலில் விழப்போகும் ஊர்மிளாவைத் தடுக்கிறான் லட்சுமணன்.



நான் இதற்கெல்லாம் தகுதி இல்லாத வன். என்னை ஒரு நல்ல தம்பியாக உலகம் போற்றலாம். ஆனா, நான் நிச்சயமாக ஒரு நல்ல கணவன் இல்லை என்பது எனக்கே தெரியும் என்று சொல்லி கடுங்கோபத்துடன், மனைவியின்மீது உச்சக்கட்ட வெறுப்போடு காட்டிற்கு செல்கிறான்..

கணவன் தன்மீது கோபத்துடன் அங்கிருந்து சென்றாலும் அதைத்தான் ஊர்மிளாவும் விரும்பினாள். ஏன்னா, இதைத்தானே ஊர்மிளா எதிர்பார்த்தாள். தானும் இலட்சுமணனுடன் வனவாசம் போனாலோ,இல்லை அரண்மனையில் அவரை நினைத்து வருத்தத்துடன் இருப் பதை லட்சுமணன் உணர்ந்தாலோ இலட் சுமணன் தன் கடமையை முழுமையாக செய்ய முடியாது என்பதை நன்கு அறிந்தவள் ஊர்மிளா.

அதனால்தான்,தான் ராஜ வாழ்க் கைக்கு ஆசைப்படுவதுபோல நடித்து இலட்சுமணனை கோபம்கொள்ள செய்தாள். இனி வனவாசம் முடியும்வரை அவர் ஒரு நொடிகூட தன் நினைவு இல்லாமல் அவருடைய கடமையை முழுமனதுடன் செய்வார் என நம்பினார் ஊர்மிளா.

இலட்சுமணன் அங்கிருந்து சென்றவுடன் தன் திட்டம் நிறைவேறியதை எண்ணி மனதிற்குள் அழுதாள் ஊர்மிளா.

நாட்டிற்கு திரும்பிய பரதன் நடந்ததை கேள்விப்பட்டு, தாயை திட்டி, மரவுரி தரித்து தானும் காட்டுக்கு போகும்போது அவனையும் தடுத்தாள் ஊர்மிளா.

தசரதனை இழந்து ராமனும் காட்டுக்கு சென்று சரியான தலைமை இல்லாமல் நாட்டு மக்கள் அவதிப்படுறாங்க.

அதில்லாம ஏற்கனவே இரு பிள்ளைகளை காட்டுக்கு அனுப்பிய கைகேயி, கோசலை , சுமித்ரா என்னும் மூன்று தாய்மார்கள் மனம் நொந்து போயிருக்கிறார்கள்.

அதில்லாமல் கணவனை பிரிந்து என்னை போலவே என் தங்கையும் கணவனை பிரிந்திருக்க வேண்டுமாவென பரதனிடம் அனைவரின் நலனுக்காகவும் வாதிட்டாள்.

ஊர்மிளாவை மறந்து வனவாசத்தில் இராமன்சீதைக்கு பாதுகாப்பு கவசமாக இலட்சுமணன் இருந்தான்.

இலட்சுமணனுக்கு பாதுகாப்பு அரணாய் ஊர்மிளாவின் பவித்திரமான அன்பும் தியாகமும் இருந்தது.

இரவும் பகலும் தன் அண்ணனையும் சீதையையும் காக்க எண்ணிய இலட்சுமணன் தன் தூக்கத்தை 14 ஆண்டுகள் தியாகம் செய்தால் நன்றாய் இருக்குமெனவும், பிற்காலத்தில் இது உதவுமென்பதை முன்கூட்டியே உணர்ந்த ஊர்மிளா, தூக்கத்தின் கடவுளான நித்ரா தேவியிடம் லட்சுமணன் 14 வருடங்கள் தூங்காமல் இருக்கவேண்டுமென வரம் கேட்டாள்.

நித்ராதேவி அதற்கு சம்மதிக்க மறுத்துவிடடாள். தன் கணவனின் கடமைக்காக அவருடைய தூக்கத்தையும் சேர்த்து நான் தூங்குகிறேன் என நித்ராதேவியிடம் கோரிக்கை வைத்து அதில் வெற்றியும் கண்டார் ஊர்மிளா.

தூங்குவது மிகப்பெரிய தியாகமா? எந்த பொறுப்புமில்லாம ஆனந்தமா தூங்கலாம்ன்னு நினைச்சுக்கலாம்.

அளவுக்கு மிஞ்சினா அமிர்தமும் நஞ்சு!

சோறு தண்ணியில்லாம,நல்ல நாள் கிழமைன்னு இல்லாம 14 ஆண்டுகள் இலட்சுமணனுடைய தூக்கத்தையும் சேர்த்து தூங்குவது சாதாரண வேலை இல்ல.

இதனால் தனது ஆரோக்கியம் பெருமளவில் பாதிக்கக்கூடும்ன்னு தெரிஞ் சேதான் தன் கணவன் மீது கொண்ட காதலுக்காக அதனை செய்ய முன்வந்தாள் ஊர்மிளா.

ராமராவணனுக்கிடையிலான போரில் இராமனுடைய படைகளுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாய் இருந்தவன் இராவணனின் மகன் மேகநாதன் என்னும் இந்திரஜித்.

அவனை வதைப்பது என்பது இராமனுக்கே சவாலாய் இருந்தது.

ஏன்னா, இந்திரஜித் வாங்கி வந்த வரம் அப்படி. எவன் ஒருவன் 14 ஆண்டுகள் தூங்காமல் இருக்கிறானோ அவனால் மட்டுமே தான், கொல்லப்படவேண்டும் என்று வரம் பெற்றிருந்தான் இந்திரஜித்.

அதன்படி இலட்சுமணின் தூக்கத்தையும் சேர்த்து ஊர்மிளா 14ஆண்டுகள் தூங்கிய தால் மேகநாதனை கொல்லும் தகுதி பெற்ற ஒரே ஆளாக இலட்சுமணன் இருந்தார்.

அதனால் மேகநாதனையும் லட்சுமணன் கொன்றார்,

ஊர்மிளாவின் இந்த தியாகம் மட்டும் இல்லையெனில் இராமனால் போரில் வெல்வது மிகக்கடினமாய் இருந்திருக்கும். போரில் வெற்றியடைந்து அயோத்தி திரும்பிய இராமன் மற்றும் சீதையை கோலாகலமாக வரவேற்று எல்லோரும் மகிழ்ந்திருந்தனர்.

ராமர் பட்டாபிஷேகத்துக்கு நாளும் குறிக்கப்பட்டது. ஆனால், இலட்சுமணன் ஊர்மிளா மேலிருந்த கோபத்தால் ஊர்மிளாவை கண்டுக்கொள்ளவில்லை.

இதனால் ஊர்மிளா மனம் நொந்தாள்.

தன் சகோதரியின் முகத்தில் கவலை ரேகை ஓடுவதைக்கண்ட சீதை அதற்கான காரணத்தை கேட்டபோது, இலட்சுமணனை வனவாசம் அனுப்ப தான் அரங்கேற்றிய நாடகத்தையும், அவருக்குக்காக 14 ஆண்டுகள் உறங்கியதையும் கூறிய ஊர் மிளாவை ஆயிரம் சீதை சேர்ந்தாலும் உன் ஒருத்தியின் பவித்திரத்திற்கும், தியாகத்திற்கும் ஈடாகாது என கண்ணீர் விட்டு அணைத்த சீதை, லட்சுமணனிடம் உணர்த்திய பின் ஊர்மிளாவிடம் மன்னிப்பு கோரினார் லட்சுமணன்.

சீதை அக்னிப்பிரவேசம் செய்ய

நேர்ந்ததை தெரிஞ்சு, ஊர்மிளாவின் கொந்தளித்தாள்.

காட்டில் இத்தனை ஆபத்துகள் இருக்குமென எடுத்துச்சொல்லி ராமன் நீ வரக்கூடாது என சீதைக்கு உத்தரவு போட்டிருந்தால், சீதையால் அதை மீறியிருக்க முடியுமா?! பாதுகாப்பிற்கு லட்சுமணன், வேலைகளுக்குச் சீதை எனத் தேவைப்பட்டதால்தானே ராமன் பேசாமல் இருந்துவிட்டான்.

அதனால்தானே சீதைக்கு வனத்தில் இத்தனை ஆபத்துகள் வந்ததென சீதைக்கு தாயாய் இருந்து ஊர்மிளா குமுறுகிறாள். சீதாஊர்மிளாவின் தாய் தந்தையர் திருமணம் செய்வித்து கொடுத்ததோடு சரி.

ஒருமுறைகூட அயோத்திக்கு வந்து எப்படி மகள்கள் இருக்காங்கன்னு பார்க்கவே இல்ல.அதனால் சீதை உட்பட மற்ற சகோதரிகளுக்கும் தாயாய் ஊர்மிளா இருந்தாள்.

ராமர் பட்டாபிஷேகம்லாம் முடிஞ்சு எல்லாரும் நிம்மதியாய் இருந்த காலக்கட்டம் தொடங்கியது.

ராமரும் சீதையும்கூட தங்கள் வாழ்க்கையை ஆரம்பிச்சாங்க.

இனி நாமும் இல்லற வாழ்க்கையை தொடங்கலாம்ன்னு நினைச்ச ஊர்மிளா வுக்கு அடுத்த இடி விழுந்தது.

சோர்வுடன் வந்த லட்சுமணன், 14 வருடங்களாய் தூங்காத தூக்கத்தை இனி தூங்கனும்.

உன் மடியை கொடுன்னு படுத்துறங்க ஆரம்பிச்சான். லெட்சுமணன் அவனது தூக்கம் 14வருடங்கள் தொடர்ந்தது.

இப்படி எந்த ஒரு காலக்கட்டத்திலும் ஊர்மிளா தியாகம் செய்ய தவறவே இல்லை.

ராமன் நாடாளும்போது, சீதை கருத் தரித்தாள்.

மாறுவேடம்கொண்டு நகர்வலம் வரும்போது துணி வெளுப்பவனின் பேச்சை கேட்டு, சீதையின்பால் சந்தேகம் கொண்டு அவளை தீக்குளிக்க சொன்னதை கேட்டு வெகுண்டெழுகிறாள் ஊர்மிளை.

சீதையின் கற்பு பற்றி ராமனுக்கு ஐயமில்லை.ஆனா, ஊரார் எதுவும்

அவளை தவறாய் பேசிடக்கூடாதே என்றுதான் அக்கினிப்பிரவேசம் செய்யச் சொன்னான்ன்னு அவளை சமாதானப்படுத்த பலர் முயற்சிக்கையில்,ஊர்மிளா ராமனிடம், இன்று ஊரார் பேச்சுக்கு முக்கியத்துவம் தருகிறேன் என்று சொல்கிறீர்களே! அன்று அயோத்தி மக்கள்லாம் நீ வனவாசம் போகக்கூடாது என கெஞ்சினார்களே!

அப்போது மக்கள் கருத்துக்கு நீ ஏன் செவிமடுக்கவில்லை?

அன்று தந்தைக்குக் கொடுத்த வாக்கு தான் முக்கியமென நினைத்த உனக்கு உன் குடும்பம்தானே முன்னுக்கு நின்றது? இப்போது மட்டும் என்ன மக்கள் பற்றிய கவலை? என கேட்கிறாள்.

பெண்களின் பல கேள்விகளுக்கு ஆண்களிடம் பதில் இல்லாதது போலவே ராமனிடமும் இதற்கு பதிலில்லை.

இராமன் விஷ்ணுவின் அவதாரம், சீதையோ, இலட்சுமியின் அவதாரம், இலட்சுமணனோ ஆதிசேஷனின் அவதா ரம்.அவர்கள் தங்களின் கடமையை செய்வதற்காக செய்த தியாகங்களை காட்டிலும் மனித பிறவியான ஊர்மிளா தன் கணவர்மீது கொண்ட காதலுக்காக செய்த தியாகம் மிகப்பெரியது.

அந்த 14 ஆண்டுகளும் அரண்

மனையின் எந்தவித சுகபோகங்களையும் அனுபவிக்காமல் தன் கணவரை போலவே விழித்திருக்கும் நேரத்தில் வனவாச வாழ்க்கையே வாழ்ந்தார் ஊர்மிளா.

இராமன் மற்றும் சீதாவின் காதலுக்கு எந்தவிதத்திலும் குறையாத காதல் இலட்சுமணன் மற்றும் ஊர்மிளாவிற்கு இடையேயான காதல்.

ராமாயணத்தில் மனைவிக்கான கடமை, தாய்க்கான கடமை, மகன், சகோதரன், தலைவன், குரு, நண்பன்.. என அனைவருக்குமான கடமை சொல்லப் பட்டிருகிறது.

ஆனால் மனைவிக்கான கணவனின் கடமையை எந்த இடத்திலும் சொல்லப் படவே இல்லையென சீதை பூமிக்குள் புதையுண்டபின் அழுது அரற்றி ராமனிடம் ஊர்மிளா வாதிடுகிறாள்.

அழகும்,குணநலனும், அறிவும், ஆற்ற லுமென சீதைக்கு சற்றும் குறைவில்லாதவள் ஊர்மிளா.

ஆனாலும், அவதாரமூர்த்தியையே மணந்தாலும் தியாக வாழ்க்கையே வாழ்ந்து வந்தாள்.

சகோதரிகளுக்கு தாயாய், மனைவியாய், மருமகளாய், தலைவியாய் திறம்பட வாழ்ந்த ஊர்மிளாவின் தியாகம் விளக்கின டியிலிருக்கும் இருள்போல வெளிவராமலே போனது...

அவளுக்கான தனிப்பட்ட வாழ்க்கையில் தோற்றவளாகவே முடிந்து போனது அவளது கதாபாத்திரம். எது எப்படி இருந்த போதிலும் இதுவே பதி பக்தி என போற்றுகிறது புராணம்.

நல்லதை அறிவோம்!

நலமுடன் வாழ்வோம்!

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

தொடர் –41

குருவைத் தேடி

அடடா, கிருஷ்ணன் இறந்து விட்டாரா, மீண்டும், மீண்டும் எனக்குள்ளேயே திரும்ப, திரும்பக் கூறிக்கொண்டேன். அந்த கஷ்ட காலத்தில் என்னோடு பேச்சுத் துணைக்கு என்றிருந்த ஆத்ம நண்பனை இழந்து விட்டேன். இனி

யாரிடம் பேசுவது. கிருஷ்ணா இறந்து விட்டார் என்பது அப்போது தான் எனக்கு உறைத்தது.

ஓ வென்று கதறி அழ வேண்டும் போல் இருந்தது. எங்காவது தனிமையாக செல்ல வேண்டும் போல் இருந் தது. எங்கு செல்வது. இந்த உலகத்திலேயே எனக்கென்று ஓளிந்து கொள்ள இருக்கும் ஒரே இடம் என் குருநாதர் இராமாசாதுவின் கொட்டையூர் ஆஸ்ரமம் தான்.

மிதி வண்டியை எடுத்துக் கொண்டு ஆஸ்ரமம் சென்று மனதிற்குள்ளேயே அழுது தீர்த்தேன். குருநாதர் இருந்த போதாவது இவ்வுலகத்தில் நமக்கு ஒரு துணை இருக்கிறது என்ற பாதுகாப்பு உணர்வு இருந்தது. இப்போது அதுவும் இல்லாததால் மனம் பாதுகாப்பற்று பிடிப்பில்லாமல் போனது.

குருநாதரின் சமாதிக்குப் பின்பு ஆஸ்ரமம் அமைதியாய் இருந் தது. குருநாதர் இருந்தபோது ஆஸ்ரமம் வரும் போது வெகுநேரம் அவருடனே கழித்ததால் வேறு யாருடனும் பழக்கமில்லை. அவரிடத்தில் அவருக்குப் பதில் இப்போது யார் இருக்கின்றார்கள் என்பதும் தெரியவில்லை. அங்கிருக்கும் பேராற்றலை உணர்ந்து கொள் ளும் அளவிற்கு என் மனதில் அமைதி யில்லை. எனவே ஆஸ்ரமமும் என்னை விட்டு தள்ளி நின்றது போலிருந்தது.

நான் உடனடியாக புறப்பட்டு வீடு வந்து சேர்ந்தேன்.வெகு நேரம் சிந்தித்து இனிமேல் இங்கிருப்பது நல்லதல்ல. நாம் ரிஷிகேஷ் சென்று விடுவது தான் சிறந்தது என்று முடிவெடுத்தேன். காலையில் புறப்பட்டு விடலாம் என்று தோன்றும். பிறகு மதியம் போகலாம் என்றிருப்பேன். இரவாகிவிடும். பிறகு மறுபடி காலை இப்படியே மூன்று நாள் போய் விட்டது.

நான்காம் நாள் காலையில் கண்டிப்பாக சென்றேயாக வேண்டும் என்ற முடிவோடு முதல் நாள் இரவே பையில் துணிகளை எடுத்து வைத்து தயாராக இருந்தேன். காலையில் நான்கு மணிக்கெல்லாம் எழுந்து தயாரானேன்.



அம்மா இருவரும் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தனர். பத்து பேர் கொண்ட குடும்பத்தில் திசைக்கு ஒருவராய் சென்று விட்டனர். நான் ஒரு ஆண் இருக்கின்றேன் என்ற நிம்மதியில் தானே உறங்கிக் கொண்டு இருக்கின்றனர். அவர்களை தவிக்க விட்டு செல்வது சரியா? சற்றே மனம் பின்வாங்கியது. அப்படியே உட்கார்ந்து விட்டேன்

காலை ஆறு மணிக்கெல்லாம் என்னை யாரோ அழைக்க நான் வெளியில் வந்து பார்க்கின்றேன். அங்கே நகரின் பிரபலமான அலங்கார நிறுவனத்தின் முதலாளி நின்றிருந்தார். அவர் எனக்கு அறிமுகம் இல்லாதவர்.

நான் அவரை வரவேற்று அமர வைத்தேன். அவர் நீங்கதானே ஸ்ரீராம் என்றார். நான் ஆமாம் என்றேன்.

நான் கிருஷ்ணனுடைய கடையில் தான் முடி வெட்டுவேன். கிருஷ்ணன் எனக்கு நல்ல நண்பர். அவர் இறந்துட்டார் தெரியுமா? என்றார்

நான் தெரியும் சார் என்றேன். அவர் தொடர்ந்தார். இன்று காலையில் நான்கு மணிக்கு எனக்கு ஒரு கனவு வந்தது. அதில் கிருஷ்ணன் வந்தார். அவர் உங்கள் வீட்டு முகவரியைக் கூறி, அங்கு ஸ்ரீராம் என்ற இளைஞர் ஒருவர் இருப்பார். அவர் இப்போது மனக்கஷ்டத்திலும், பொருளாதாரக் கஷ்டத்திலும் இருக்கின்றார. அவருக்கு அலங்கார வேலைகள் தெரியும். அவருக்கு உதவுங்கள் என்று கேட்டுக் கொண்டார் ஆகையால் தான் உடனடி யாக உங்களை தேடி வந்தேன் என்றார்.

கிருஷ்ணன் என் மீது வைத்திருக்கும் அன்பை எண்ணி நெகிழ்ந்தேன். செத்தும் கொடுத்தான் சீதக்காதி என்பதுபோல இறந்தும் எனக்கு உதவ எண்ணியதை நினைந்து வியந்தேன். இப்படியும் நடக்குமா என்றபடி அவரைப் பார்த்து இந்த வாய்ப்பை ஏற்றுக் கொள்வதா வேண்டாமா என்று தவித்தேன்.

உறங்கிக் கொண்டிருக்கும் அம்மா ஞாபகத்திற்கு வர, ரிஷிகேஷ் செல் லும் திட்டத்தை தற்காலிகமாக தள்ளிப்போட்டுவிட்டு, ரொம்ப நன்றி சார் என்று அந்த வேலையை ஏற்றுக் கொண்டேன். தொடர்ந்து ஆறு மாதம் எந்த வித பிரட்சனையும் இன்றி வேலை ஓடிக்கொண்டிருந்தது.

மனதிற்குள் ரிஷிகேஷ் வந்து, வந்து போய்க்கொண்டிருந்தது.எப்படியாவது அம்மா இருவரையும் சொந்த ஊருக்கு கூட்டிச் சென்று குடியமர்த்தி விட்டால் நாம் ரிஷிகேஷ் சென்று விடலாம். என்ற எண்ணத்துடன் வாழ்க்கை போய்க்கொண்டிருந்தது.

ஒரு ஓய்வு நாளில் கும்ப முனி வரின் சன்னதியில் தியானம் முடித்து எழுந்தபோது அவரைப் பார்த்தேன். நேசமுடன் என்னை பார்த்து சிரித்த சுவாமிகளை எங்கோ பார்த்தது போலிருந்தது. எங்கே பார்த்திருக்கின்றேன் என்று யோசித்துக் கொண்டு இருந்தபோது அவரே என்னருகில் வந்து என் கைகளைப் பிடித்து, என்ன ஊரிலேயே தங்கிவிட்டாய்? சிவன் கோவிலில் வேலை இருக்கின்றது புறப்படு என்றார்.

நீங்கள் யார் என்றேன். நான் சிவன் கோவில் சுவாமிகளின் சீடன் என்றார்.

இங்கு சில வேலைகளை ஒத்துக் கொண்டேனே என்றேன் நான்.வேலை இல்லை என்றால் புறப்படுகின்றாயா என்றார் சுவாமிகள். அப்படி என்றால் சரி என்றேன். அப்படியே ஆகட்டும் என்று என் தலை மீது ஆசீர்வதிப்பது போன்று கையை வைத்து விட்டு சென்று விட்டார்.

நான் அதை அத்துடன் மறந்து

விட்டேன். ஒரு வாரம் இருக்கும். எனக்கு வேலை கொடுத்தவர் திடீரென காரணமே இல்லாமல் வேலையை நிறுத்திவிட்டார்.

அப்பறம் என்ன? என் உள் மனமும் அதைத் தானே எதிர்பார்த்தது. உடன டியாகப் புறப்பட்டு சொந்த ஊருக்கு சென்று விட்டேன். அடுத்த இரண்டு நாட்கள் சும்மாவே பொழுது சென்றது.

சிவன் கோவிலில் வேலை இருக் கின்றது என்றாரே ஒரு சாமியார். என்னவாக இருக்கும் என்று யோசித்துக் கொண்டிருந்தபோது என் சிற்றப்பா மகன் என்னிடம் வந்து, அண்ணே! தனக்கு நாக தோசம் இருப்பதாகவும், அதற்கு பரிகாரமாக நாகர் சிலை செய்து கோவி லில் வைக்கும்படி சோதிடர் கூறியதாகக் கூறினான். மேலும் நாகர் சிலை எங்கு கிடைக்கும் என்று கேட்டான்.

அதற்கென்ன நாமே செய்து கொண்டால் ஆயிற்று என்று கூறிவிட்டு அன்றிரவே எங்கள் மொட்டை மாடி யில் வைத்து சிமெண்டால் ஒரு அடி யில் நாகர் சிலையை செய்து விட்டு இரவு வெகு நேரமாகிவிட்டபடியால், அந்த சிலைக்கு அருகிலேயே படுத்துக் கொண்டேன்.

சிலை செய்வதற்கு உதவிய அனை வரும் அவரவர் வீடுகளுக்குச் சென்று விட்டனர். அதிகாலை நான்கு மணி இருக்கும். என் உடல் மீது யாரோ படுத் திருப்பது போன்று உணர்வு ஏற்பட கண்ணைத் திறந்து பார்க்கின்றேன். என் உயரத்திற்கு ஒரு பருமனான நாகம் என் மேல் படுத்திருக்கின்றது. அதனிடம் எந்த அசைவும் இல்லை.

மனம் பதட்டம் அடைந்தது. இருப்பினும் நிதானமாக ஒரு பக்க மாக சாய்ந்து எழுந்து அதை கீழே உதறுகின்றேன். கீழே விழுந்தவுடன் மெல்ல தலையைத் தூக்கி என்னைப் பார்க்கின்றது. நான் பயந்து போய் கைபிடிச்சுவர் ஓரமாக மெல்ல நகர, அதுவும் நகர்கின்றது. நான் நின்றால் அதுவும் நிற்கின்றது.

இப்படியே என்னை அசைய விடா மல் பத்து நிமிடத்திற்குமேல் அதன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. பிறகு மெதுவாய் நகர்ந்து போய் நான் செய்து வைத்திருந்த சிமெண்ட் நாகத்தை சுற்றி வளைத்து படுத்துக் கொண்டது.

நான் மெதுவாக கீழிறங்கி வந்து விட்டேன். யாரிடமும் எதுவும் சொல்லாமல் மாலையில் அனைவ ரையும் கூட்டிக்கொண்டு மெல்ல மேலே சென்று பார்த்தேன். நாகராஜா சிலை மட்டும் இருந்தது. நாகராஜாவால் இந்த சிலை ஆசீர்வதிக்கப்பட்டது என்பதை புரிந்து கொண்டேன்.

அன்று மாலை ஊரில் இருக்கும் சிறுவர் சிறுமியர் என அனைவரையும் அழைத்துக் கொண்டு, நாகராஜா சிலையுடன் நானும், என் சகோதரனும் சிவன் கோவிலுக்குப் பயணமானோம்.

கடினமான பாதைகளை கடந்து காட்டிற்குள் இருந்த சிவன் கோவி லுக்குச் சென்று எங்களுக்கு தெரிந்த முறையில் கோவிலுக்கு அருகாமையில் உள்ள இடத்தை சுத்தப்படுத்தி அதில் நாகராஜாவை பிரதிட்டை செய்து அபிசேக ஆராதனைகளை செய்து வணங்கினோம்.

நாங்கள் இக்காரியங்களை செய்ய ஆரம்பித்ததில் இருந்து கோவிலுக்குள் இருந்து மர்மமான வகையில் ஒரு ஒலி எங்களை பயமுறுத்தும் வகையில் வந்து கொண்டே இருந்தது. நான் எங்கள் குழுவில் இருக்கும் குழந்தைகளிடம், யாரும் பயப்பட வேண்டாம் என்று கூறிவிட்டு நாகராஜாவை பிரதிட்டை செய்வதில் கவனத்தை செலுத்தினேன்.

பிற்பாடு ஒலி வந்த திசையை நோக்கி

கவனித்தேன். இப்பொழுதும் அந்த ஒலி வந்து கொண்டே இருந்தது. மெல்ல கோவிலுக்குள் சென்று பார்க்கின்றேன். கர்பக்கிரகமும், அதை ஒட்டிய சின்ன மண்டபமும் உள்ள சிறிய சமாதிக் கோவில் அது. உள்ளே இருந்துதான் அந்த ஒலி வந்து கொண்டிருந்தது.

கர்பகிரகத்தில் சிவலிங்கம் சின்ன விளக்கொளியில் காட்சியளித்துக் கொண்டிருந்தார். நான் தைரியமாக மெல்ல கர்பகிரகத்தை நோக்கி முன்னேறினேன். இப்போது ஒலி மிக வேகமாக என்னை பயமுறுத்துவதைப் போன்று வேகமாக வர ஆரம்பித்தது.

அதே நேரத்தில் திடீரென்று காற்று மிக வேகமாக அடிக்க ஆரம்பித்து கருவறையில் தொங்கிக் கொண்டு இருக்கும் விளக்கை ஆட வைத்தது. நான் சற்று நின்று நிதானமாக சிவலிங்கத்தைப் பார்க்கின்றேன்.

திடீரென அடித்த காற்றில் விளக்கு ஆட ஆரம்பித்தது. ஆதலால் லிங்கத்தின் நிழலும் சுவற்றில் ஆட, சற்றே லிங்கத்தில் பின்னால் அமர்ந்திருந்த உருவமும் நிழல் ரூபத்தில் என் கண்களில் பட்டது. யாரது கர்பக்கிரகத்தில் அமர்ந்திருப்பது என்று நான் சத்தமாக குரல் கொடுத்தேன்.

சற்று நேரத்தில் குரல் மெல்ல மெல்ல அடங்கியது. மெதுவாக லிங்கத்தின் பின்னால் இருந்து ஓர் உருவம் எழுந்து என்னை நோக்கி வந்தது. திடகாத்திரமாக ஆறு அடி உயரம். கறுப்பான தேகம். இருபது வயது இருக்கும்

யார் நீங்கள் என்றேன் நான்!

நான் இந்த கோவிலின் புதிதாக வந்திருக்கும் ஆனந்த் பூசாரி என்றார் அவர்.

குழந்தைகள் எல்லாம் வந்திருக்கின்றார்கள் இப்படித்தான் பயமுறுத்துவீர்களா? என்றபடி நான் அவரிடம்



கோபப்பட, நாங்கள் எல்லாம் இருக்கும் போது நீங்களாகவே கோவிலில் பிரதிட்டை செய்வீர்களா என்று அவரும் என்னிடம் பதில் பேச வாக்குவாதம் முற்றியது.

நல்லவேளை சரியான சமயத்தில் அங்கு ஒரு பெரியவர் வந்தார்.

வந்தவர் என்னை சமாதானப் படுத்துவதிலேயே குறியாக இருந்தார். நான் அவரிடமும் கோபப்பட, அவர் என்னை தனியாகக் கூட்டிச் சென்று என்னப்பா நீ, அந்த பையன் கூட சண்ட போட்டுக்கிட்டு, அவன் ஒரு அகோரி, இன்னும் ஆறு மாதத்திலே சீவசமாதி ஆகப்போறான். அவனது சீவசமாதிக்கு துணை செய்ய என்னை அனுப்பியிருக்காரு காசி சாமியாரு என்றார்.

யாரு காசி சாமியா, இப்ப எங்கே இருக்கார். நீங்க எப்ப பார்த்தீங்க, நான் அவரிடம் வரிசையாக கேள்விகள் கேட்க, அவரோ என்னை சற்றே கையமர்த்தி, உனக்கும் ஒரு செய்தி அனுப்பியிருக்கின்றார் என்றபடி

சுருட்டிய கை மடிப்பில் இருந்து கசங்கிய ஒரு பேப்பர் துண்டை எடுத்து என்னிடம் நீட்டினார்.

நான் அதை ஆர்வமாக வாங்கி பிரித்தேன். தமிழில் தான் எழுதப்பட்டிருந்தது. இன்றிலிருந்து நான்கு ஆண்டுகள் இந்த ஊரில் தான் நீ தங்க வேண்டும்.திருமணத் திற்கு உனக்குண்டான பெண் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டாள். அந்தப் பெண்ணே உன்னிடம் வந்து உன்னை விரும்புவதாக தெரிவிப்பாள். அவளே உனக்காக துணைவியாவாள். அவளை அறிந்து கொண்டு அவளுக்குண்டான ஆன்மீகப் பயிற்சியை மூன்று ஆண்டுகள் நீயே தான் கொடுக்க வேண்டும்.

மூன்றாம் ஆண்டின் முடிவில் உனக்கு அவளுடன் திருமணம் நடைபெறும். இதற்காக நீ பல பிரச்சனைகளை சந்திக்க வேண்டிவரும் எதற்கும் கலக்கமடையாதே! உன்னோடு என் சார்பாக உன் ஊரில் சமாதி கொண்டிருக்கும் முருகையாவின் சீடரான கஞ்சா சாமி உனக்கு உதவுவார். நமச்சிவாயம்! திருமணத்தில் சந்திப்போம். என்றிருந்தது.

நான் அவருக்கு ஒரு வணக்கத்தை வைத்துவிட்டு சரி சுவாமி இனிமேல் அவரிடம் கோப்பபட மாட்டேன் என்று கூறி விடை பெற்றேன்.

அதற்கு அவரோ, நன்றாக இருக்கின்றது. உன் வேலை முடிந்ததும் புறப்பட்டுவிட்டாயே! என்றார்.

சரி நான் என்ன செய்ய வேண்டும் கூறுங்கள் என்றேன்!

ஆனந்த் சீவ சமாதி ஆவதில் இங்கு சில சிக்கல்கள் உள்ளன. ஆகவே அவனுக்கு சில உதவிகள் தேவைப்படுகின்றன. அதற்கு எனக்கு உன்னுடைய உதவியும் தேவைப்படுகின்றது. எப்போது வேண்டுமானாலும் உன்னை தொடர்பு கொள்வேன் அதற்கு நீ தயாராய் இரு. என்றார்.

அப்படியே ஆகட்டும் என்றபடி அவரிடம் விடை பெற்றுக் கொண்டேன். வீட்டிற்கு வந்து மொட்டை மாடிக்குச் சென்று தீவிரமாக சிந்திக்க ஆரம்பித்தேன். சிவன்கோவில் சாமியார். அதிசய சம்பவங்கள், செய்திகள் இவைகளை எல்லாம் நான் விரும்புகின்றேன். அதனுடன் பயணிக்க நான் தயாராக இருக்கின்றேன். ஆனால் எனக்கு திருமணம் என்ற செய்தியை நான் விரும்பவில்லை. அதற்காக யாரும் மெனக்கிடுவதையும் என்னால் அனுமதிக்க முடியாது.

எல்லாவற்றிலும் முரண்பட்ட கருத்துக்களை கொண்டிருந்த என் மனம். என்னை இயக்கிக் கொண்டிருக்கும் என் குருவின் சக்தியை உணர மறுத்து நான் அனைத்தையும் அறிவேன். இதில் இருந்து நான் எப்படியாவது தப்பித்து விடுவேன். என்றவாறே வேறு கோணத்தில் சிந்திக்க ஆரம்பித்தேன்.

அதே நேரத்தில் நான் ஊருக்குள் யார் வீட்டில் தங்குவது என்பதில் சில உறவினர்களுக்குள் பிணக்குகள் ஏற்பட்டது. அவர்களின் தேவையில்லாத கருத்துக்கள் எனக்கு மன வேதனையை ஏற்படுத்தியது. இவை எல்லாம் சேர்ந்து என்னை ஒருவாறு முடிவெடுக்க வைத்தது. ஆறு மாதத் திற்கு முன்பாக நான் எடுத்த அதே முடிவுதான்.

உறவினர்களின் தொல்லைகளையும், திருமண பந்தத்தில் இருந்தும் ஒரே நேரத்தில் விலகிவிட எனக்கு சரியாக தெரிந்த வழி அது ஒன்றுதான். ஆம் நான் அங்கிருந்தவாறே ரிஷிகேஷ் புறப்பட்டுவிடுவது என்று தீர்மானித்தேன்.

- (தொடரும்)

"ஸ்ரீ பாத ராஜம் சரணம் ப்ரபத்யே"

மிகவும் கடுமையான கலியின் களியாட்டத்தில் பலவிதமான இயற்கை சீற்றங் களினால் அல்லல்படும் நம் அனைவருக்கும் கலியுகத் தின் முதல் தத்த அவதாரியும் ஸ்ரீ ஷீரடி சாயிபாபா உருவில் என்றென்றும் நம்மை காத்து அருள்புரியும் ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் அருளிச்செய்த இந்த மாமந்திரத்தை அனுதினமும் ஜபம் செய்து முழுமையான பாதுகாப்பு வளையத்தில் நாம் திகழ்ந்திட...



"திகம்பரா திகம்பரா ஸ்ரீ சக்ர தத்தாத்ரேயா திகம்பரா"!

– என்ற நேர்மறை ஆற்றலைக் கூட்டும் மந்திரத்தை ஜபம் செய்ய வேண்டுகிறோம்.

இம்மந்திரத்தை தினமும் 108 முறை ஜபம் செய்ய வாய்வு மண்டலத்தில் உள்ள எதிர்மறை சக்தியின் தாக்கத்தில் இருந்து நம் அனைவருக்கும் பாதுகாப்பு கிட்டும் என்பது அனுபவப்பூர்வமான உண்மை.

"ஜய ஜய ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா"

விபரங்களுக்கு; சுந்தர்சாய், 9789404451

தொடர் –5

சாய் சரவணன்

"அதி தேவதை"

சுந்தராபாயின் ஒரே லட்சியம் பாண்டுரங்கனை அடைவதுதான் என எண்ணம் கொண்டிருந்தாள். அதற் காக வாழும் ஒவ்வொரு நொடியும் இறைவனுக்கு சமர்ப்பணம் என வாழ்ந் தாள். அப்படி ஒரு நாள் தன் அன்றாட விட்டல் வழிபாடிட்டினை செலுத்த விட்டலின் தரிசனத்திற்காக வந்தாள்.

அன்று எதிர்பாராத விதமாக சுந்தராபாய் ஒரு காட்சியைக் கண்டாள். விட்டலனுக்கு சேவை செய்யும் பூசாரிகள் காலதாமதமாக ஒரு தவறைச் செய்கிறார்கள். பகவானுக்கு காட்ட வேண்டிய ஆரத்தி சேவை மற்றும் நைவேத்தியம் தாமதமாகிறது. இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத சுந்தரா பாய் தன் அதீத பக்தியால் பூசாரிகளிடம் கேள்வி கேட்டு விட்டாள். இறுதியில் சுந்தராபாயிக்கும், பூசாரிகளுக்கும் வாக்குவாதமே மிச்சமாகிறது.

இதனால் மனம் உடைந்த சுந்தரா பாயி கோவிலின் பிரகாரச் சுற்றில் இருக்கும் காணோபாத்ராவின் சமாதியில் அமர்ந்து புலம்பினாள். அங்கேயே மனதால் விட்டலுக்கு நைவேத்யமும் செய்தாள்.பிறகு வீட்டிற்கு திரும்பிச் சென்றாள். நடந்ததை தோழி பிக்குபாயிடம் கூறி புலம்பினாள்.

கோபம் கொண்ட பூசாரியோ, சுந்தராபாயிக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று எண்ணி இனிமேல் சுந்தராபாயி கோவிலுக்குள் வரக்கூடாது என்றும், விழாக்காலங்களில் விட்ட லனது ஊர்வலம் அவளது வீட்டு வாசலில் நிற்கக்கூடாது என்றும் முடிவு செய்தனர்.

பூசாரிகளின் இந்த முடிவு பிக்குபாயின் மூலம் சுந்தராபாயின் காதுகளுக்கு வந்தது. இந்த லீலையை விட்டலனே தான் செய்திருக்க வேண்டும். ஆம் அவள் தன் மீது கொண்ட பிரேம பக்தியை இன்னமும் ஊட்டி கோவிலில் மட்டும் நான் இல்லை எங்கும் நானே இருக்கிறேன் என சுந்தராபாயிக்கு புரிய வைக்க விட்டலனே லீலை புரிந்தான்.

அவனது லீலையை சுந்தராபாயி புரிந்து கொள்ளாமல் புலம்பித் தவித்தாள். என் ஆத்மாவிற்கு அமைதியே உனது தரிசனம் தான். ஆனால் அதற்கும் இப்போது தடை வந்துவிட்டதே என்று புலம்பிய போதுதான் அவளுக்கு ஓர் தெளிவு ஏற்பட்டது.

தன் பூஜை அறைக்குச் சென்றவள் விட்டலைப் பார்த்து, "ஏ பிரபு பாண் டுரங்கா, எல்லோரும் நீ கோவிலில் மக்டும் தான் இருக்கின்றாய் என நினைக்கின்றார்கள். ஆனால் நீ எங்கும் இருப்பவன். உன் லீலையை நான் நன்கு உணர்ந்தேன். இனி என் இல்லத்திலேயே ஆடிப்பாடி உனக்கு சேவை செய்கிறேன்." என்ற பக்குவத்திற்கு வந்தாள்.

அதன்படியே தன் நித்திய பூஜையை, விட்டலனது தரிசனத்தை வீட்டில் இருந்தே ஆராதித்து வந்தாள். ஏன் இப்படி எல்லாம் சுந்தராபாயின் வாழ்க்கையில் நடக்கின்றது என்றால் அவளது பிறவி ஓர் உன்னதமான இலட்சியத்திற்கானது. அந்த லட்சியத்தை நிறைவேற்ற அவள் வாழ்வையும், மனதையும் பக்குவப்படுத்தி அவளைக் கொண்டு தன் காரியத்தை நிறைவேற்றவே இவ்வாறாக பகவான் லீலை புரிகின்றான்.

சுந்தராபாயிக்கு ஏற்பட்ட இந்நிலையைப் போலவே நாமதேவரின் சீடரான சோகாமேளா என்னும் மகானுக்கும் ஏற்பட்டது. அவரையும் விட்டலனது பூசாரிகள் கோவிலுக்குள் வரக்கூடாது என்று கூறி ஊரை விட்டே தள்ளி வைத்தனர். இருப்பினும் அவரோ, மனதால் விடாது பகவானிடம் பக்தி செய்தார். இறுதியில் பகவானே அவர் வீட்டிற்குச் சென்று தயிர்சாதம் கேட்டு வாங்கி உண்டு லீலை செய்தார் பகவான். அதைப்போலவே சுந்தராபாயின் வாழ்கையிலும் லீலை செய்தான் விட்டல்.

நித்தமும் விடாது வீட்டில் இருந்தபடியே சுந்தராபாயி, ஞானேஸ்வரி,ஏக்நாத் பாகவதம் என் பற்பல நூல்களை எல்லாம் பாராயணம் செய்தாள். அப்படி ஒரு நாள் தன்னை மறந்து விட்டலுக்கு பூசை செய்து கொண்டிருந்தாள். கண்களை மூடி விட்டலனது திவ்ய ரூபத்தை



தியானித்தபடி இருந்தாள்.

நித்தமும் மனதில் தோன்றும் விட்டல் அன்று தோன்றவில்லை. எவ்வளவோ முயற்சித்தும் அவ ளால் அன்று ஏனோ மனதை ஒருமுகப் படுத்தவே முடியவில்லை. கண்களை மூடிமூடித் திறந்தாள். இப்படியே சதா தன்னையே நினைத்துக் கொண்டிருந்த தன் பக்தைக்கு எவருக்கும் கிடைக்காத தன் தரிசனத்தை தர விரும்பினான் விட்டலன்.

ஆலயத்தில் எப்படி சுயம்பு மூர்த்தியாக, நீலமேக சியாமளனாக இருந்தானோ அப்படியே அவளுக்கு காட்சியளித்தான். இந்த தரிசனம் சுந்தராபாயின் தவத்தின் பலனும், பிரேம பக்தியின் உச்சமுமே ஆகும். சாட்சாத் பகவானை நேருக்கு நேராக கண்ட சுந்தராபாய் ஆனந்தத்தில் துள்ளிக் குதித்தாள். தன் ஆத்ம நாயகனைக் கண்டுவிட்ட அவள் விட்டலனை தன் மனதில் இறுக்கிப் பிடித்துக் கொண்டு வணங்கி மகிழ்ந்தாள்.

அப்படி தரிசனம் தந்த பகவான் சுந்தராபாயிடம், "எனக்கு பசிக்கிறது ஏதோனும் கொடு" என்றான். உடனே பூசை அறையில் நைவேத்தியத்திற்கு வைத்திருந்த வெண்ணையையும், பாயாசத்தையும் கொண்டுவந்து விட்டலனிடம் சமர்ப்பித்தாள். பகவான் கூறினார், "உன் பிரேம பக்திக்கு ஆட்பட்டே உன்னைத் தேடி வந்தேன். நீ யார் என உனக்கு உணர்த்த நானே உன் சற்குருவாய் வருவேன்" என வாக்களித்து மறைந்தான்.

பகவானின் தரிசனம் கிடைத்த ஆனந்தம் ஒரு புறம் இருந்தாலும் நானே உன் சற்குருவாய் வருவேன் எனக்கூறிய பகவானின் வாக்கு சுந்தராபாயின் மனதிற்கும், ஆத்மா விற்கும் பேரின்பத்தை தந்தது.

"தன் வாழ்வு பயன் பெற்றது" என மகிழ்ந்து இன்னமும் உற்சாகமாய் வீட்டில் இருந்தபடியே பகவானை வணங்கிய வண்ணம் அவனோடு இரண்டறக் கலந்த பாவத்தில் இருந்தாள்.

எடுத்த மனிதப் பிறவியின் நோக்கம் பகவானை ஒருமுறையேனும் தரிசிப்பதே! அப்பாக்கியம் பூர்வ சென்ம பாக்கியத்தால் சுந்தராபாயிக்கு கிடைத்தது.

விட்டலனது திவ்ய தரிசனம் கிடைத்த பிறகு தன்னை மறந்தவ ளாகவே இருந்து எல்லாவற்றிலும் எங்கும் பகவானையே தரிசனம் செய்யும்

"ஏகத்துவ" பார்வை சுந்தராபாயிக்கு கிடைத்தது. ஆயினும் தன் நித்திய கடமையான பூசைகளையும், நாம செபங்களையும் செய்யாமல் இருந்த தில்லை. இதுவே ஞானிகளின் நிலை.

தெய்வீக தரிசனம் கிட்டிய பிறகு, தனது செயல் என்று தனியாக அவளுக்கு ஏதும் இல்லை. "பகவான் ஆடுவிக்க அவள் ஆடுகின்றாள்" என்பதே அவளது நிலையாக இருந்தது.

இப்படியே நாட்கள் கழிய, பண்ட ரிபுரத்தில் கார்த்திகை ஏகாதசி, ஆஷாட ஏகாதசி தினங்களில் விட்ட லனது ஊர்வலம் நடைபெறுவது வழக்கமாகும். அப்படி ஒரு ஆஷாட ஏகாதசி தினத்தில் பகவானின் ஊர்வலம் நடைபெற்றது.

ஏற்கனவே முடிவு செய்யப்பட்டது போல சுந்தராபாயின் வீட்டின் முன்பு பகவான் நிற்கக் கூடாது என்று பேசியபடி பூசாரிகள் தங்களது அறியாமையால் ஊர்வலத்தை தொடங்கினர். பாண்டுரங்க பிரபுவின் ஊர்வலத்தின் முன்பு பாகவதர்கள் நாமசங்கீர்தனம் பாட, சில பெண்கள் நடனம் ஆடியபடி வருவார்கள்.

சுந்தராபாயின் காதுகளில் நாம சங்கீர்த்தனத்தின் ஒலி கேட்க பகவானின் ஊர்வலத்தைக் காண வீட்டில் இருந்து வெளியே வந்தாள். பாண்டுரங்கனை கண்ணார கண்டு மகிழ்ந்தாள். பகவானைக் காண கோவிலுக்குத்தானே வரக்கூடாது வெளியே அல்லவே என்று நினைத்த படி ஊர்வலத்தின் முன்பு ஆடும் பெண்களைக் கண்டாள்.

பக்தியின் பாவமே இல்லாது, வேடிக்கை பார்க்கும் மக்களை கவர வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆடும் பெண்களைக் கண்டு சுந்த ராபாய் கோபம் கொண்டு, அவர்களை நோக்கி, ஏ...பெண்களே ஏன் இப்படி மனம் போன போக்கில் ஆடுகின்றீர்கள். பகவானின் முன்பு பக்தி பாவத்தோடு ஆடாமல், வெறும் புகழ்ச்சிக்காக ஏன் இப்படி ஆடுகின்றீர்கள். என்று கத்தினாள்.

இந்த திடீர் கூச்சலால் ஊர்வலம் நின்று போனது. பூசாரிகளுக்கோ கோபம். இருப்பினும் ஏதும் பேச இயலாது நிற்க, ஆடல் பெண் ஒருத்தி முன்னால் வந்து சுந்தராபாயை நோக்கி, அம்மா நாட்டியதாரகை, எங்களுக்கு இப்படித்தான் ஆடத் தெரியும். வேண்டுமானால் நீ தான் பக்தி பாவத்தோடு ஆடேன் பார்க்கலாம் என்று சுந்தராபாயை தூண்டிவிட்டாள்.

பகவானின் ஊர்வலத்தின் முன்பு பிரேம பாவத்தோடு ஆடும் பாக்யம் கிடைத்ததை எண்ணி மகிழ்ந்தவள், உடனே வீதியில் இறங்கி பிரேம பாவம் வெளிப்பட தன்னை மறந்தபடி ராதாகிருஷ்ண விட்டலா, ஹரி ஹரி விட்டலா என்றபடி ஆடிப்பாட ஆரம்பித்தாள்.

அவ்வளவுதான் சுந்தராபாயின் காந்தக் குரலால் வந்த பகவானின் நாம சங்கீர்த்தனமும், அதன் ஆகர்ஷ்ண சக்தியும் ஊர்வலத்தில் வந்த எல்லோரையும் ஆட வைத்து விட்டது. ஊர்வலம் தொடங்கியது. பூசாரிகள் வாயை மூடிக்கொண்டார்கள். கடைசியில் விட்டலனது ஊர்வலம் சுந்தராபாயின் பீரேம நடனத்துடன் தான் முடிந்தது. பாவமே இல்லாது ஆடிய நடனப் பெண்கள் சுந்தராப ாயின் சங்கீதத்துடன் கூடிய பிரேம பாவ நடனத்தைக் கண்டு சுந்தராபாயிடம் சென்று மன்னிப்புக் கேட்டனர்.

சுந்தராபாயி, பாண்டுரங்கனிடம்," உன் முன்பாக என்னை ஆட வைக்கத் தானே இந்தத் திட்டத்தை தீட்டினாய். உன் திட்டம் நிறைவேறியதா, என்றவாறே விட்டலனை மனதார வணங்கி மனமகிழ்ச்சியுடன் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள்.

அன்றுமுதல் அவளது தூய் மையான பக்தியை ஊர் மக்களும், பக்தர்களும் உணர்ந்து கொண்டு அவளிடம் அன்புடன் நடந்து கொண்டனர்.

- (தொடரும்)

"சித்தர் ஜோதி"

ஸ்ரீ கோரக்கர் சித்தர்

கோரக்கர் கார்த்திகை மாதம் ஆயில்யம் நட்சத்திரத்தில் பிறந்தவர் என்று போகர் கூறுகிறார். இவர் வட இந்தியாவை சேர்ந்த கோரக்கர் (மராட்டியர்) ஆயினும், தமிழ்நாட்டில் உள்ள சதுரகிரியை நோக்கி பயணம் செய்து போகரை தோழராகக் கொண்டார். சட்டைமுனி, கொங்கணர் இவருக்கு நெருக்கமானவர்கள்.

ஒரு சமயம் உலகின் முதல் சித்தன் சிவபெருமான் கடற்கரையில் உமாதேவிக்கு தாரக மந்திரத்தை உபதேசித்த பொழுது, சிவபெருமான் உரைத்துக் கொண்டிருந்த தாரக மந்திரத்தை மீன் குஞ்சு ஒன்று கேட்டு மனித வடிவமாகியது. சிவபெருமான் அதற்கு மச்சேந்திரன் என்று பெயரிட்டு சிறந்த சித்தராக்கி ஞானத்தைப் பரப்புமாறு அருள்புரிந்தார்.

மச்சேந்திரன் தவம் புரிந்து சிறந்த சித்தரானார். இவர் ஒரு ஊருக்குள் சென்று பிச்சை கேட்டபோது இவருக்கு பிச்சையிட்ட பெண் மனக்குறையோடு பிச்சையிட, மச்சேந்திரர் அப்பெண்ணிடம் உனக்கு ஏற்பட்ட துன்பம் யாது என வினவினார். அப்பெண் தான் மகப்பேறு இன்றி வருந்துவதை கூறினாள்.

மச்சேந்திரர் சிறிது திருநீற்றை கொடுத்து "இதனை நீ உட்கொள் வாயானால் மகட்பேற்றை அடைவாய்" என்று கூறிவிட்டுச் சென்றார். தான் திருநீறு பெற்ற செய்தியை அவள் அண்டைவீட்டுப் பெண்ணிடம் கூறினாள்.

அவளோ "உனக்கு விபூதி கொடுத்தவர் போலித் துறவியாய் இருந்தாலும் இருக்கலாம். எனவே நீ அவ்விபூதியை உட்கொள்ளாதே" என்று கூறினாள். இதனால் அச்சமடைந்த அப்பெண், தான் பெற்ற திருநீற்றை அடுப்பில் கொட்டி விட்டாள்.

சில ஆண்டுகள் சென்றபின் மச்சேந்திரர் மீண்டும் அவ்வூருக்கு வந்தார். தான் முன்பொரு சமயம் பிள்ளைப் பேற்றிற்காக திருநீறு அளித்த பெண் வீட்டிற்கு சென்று "அம்மணி, உன்னுடைய மகனை நான் பார்க்க வேண்டும். அவனை அழைப்பாயாக", என்று கூறினார்.

பக்கத்துவீட்டு பெண் பேச்சைக் கேட்டு அன்புடன் அளித்த விபூதியை உண்ணாமல் அடுப்பில் போட்டுவிட்டு, இப்பொழுது மகன் இல்லாமல் வருந்தும் நிலையை கூறி தன்னை மன்னிக்குமாறு வேண்டினாள் அப்பெண்.

மச்சேந்திரர், ''சரி அந்த விபூதியை எங்கு கொட்டினாய்," என்று கேட்டார். அவளும் அந்த விபூதி இருந்த அடுப்பின் சாம்பலைக் காட்டினாள். மச்சேந்திரர் அடுப்பின் பக்கத்தில் நின்று "கோரக்கா" என்று கூப்பிட்டார்.

அடுப்புச் சாம்பலில் இருந்து குழந்தை ஒன்று சித்தர் திருநீறு கொடுத்த காலம் முதல் இருக்க வேண்டிய வளர்ச்சியோடு வெளிப்

பட்டது. அந்த கோதார அடுப்பின் சாம்பலில் இருந்து வெளிப்பட்டதால், கோரக்கர் என்று பெயரிட்டு சீடனாக ஏற்றுக் கொண்டார்.

ஒருநாள் கோரக்கர் ஒரு வீட்டிற்குச் சென்று பிச்சை கேட்டார். அந்த வீட்டுப் பெண்மணி ஒரு வடையை கொடுத்தாள். அந்த வடையை கோரக்கர் தன் குருவான மச்சேந்திரருக்கு கொடுத்தார்.

வடையைத் தின்ற மச்சேந்திரர் மறுநாளும் அதே போன்ற வடை வேண்டும் என்று கேட்டார். கோரக்கரும் மறுநாள் வடை தந்த வீட்டிற்கே பிச்சை கேட்டு சென்றார். ஆனால் அப்பெண்ணோ வடை இல்லை என்று சொல்லி சாதம் போட்டாள். ஆனால் கோரக்கரோ தன் குருவிற்கு வடைதான் வேண்டும் என்று கேட்டார். அந்தப் பெண்ணிற்கு கோபம் வந்தது. எது இருக்கிறதோ அதைத் தானே போடமுடியும், என்றாள்.

''உன் குரு வடை கேட்டதால் போயிற்று, இதுவே உன்னுடைய கண்ணை வேண்டுமென்று கேட்டால் தருவாயா," என்றாள். இதனைக் கேட்ட கோரக்கர் ''என்னுடைய குருநாதர் என் கண்ணைக் கேட்டாலும் தருவேன். அந்த கண்ணை நீயே பெற்றுக் கொண்டு வடையைக் கொடு," என்று கூறி தன்னுடைய கண்ணை பிடுங்கி அப்பெண்ணிடம் கொடுத்தார்.

இதைக் கண்ட அப்பெண் அச்சம் கொண்டு உடனே வடைகளை சுட்டுக் கொடுத்தாள். வடையை கோரக்கர் தம்முடைய குருவிற்களித்தார். வடைகளைச் சுவைத்த மச்சேந்திரர், கோரக்கரை பார்த்து உன்னுடைய கண் எங்கே என்று கேட்க, கோரக்கர் நிகழ்ந்ததைக் கூறினார். கோரக்கர் தன் மேல் வைத்த அன்பை உணர்ந்த மச்சேந்திரர் இழந்த கண்ணை திரும்பப் பெறுமாறு செய்தார்.

அதன்பிறகு குருவைப் பிரிந்து கோரக்கர் தனியே சென்று தவம் புரிந்து அஷ்டமா சித்திகளையும், காய சித்திகளையும் பெற்றார்.

கோரக்கர் செய்த நூல் "கோரக்கர் வைப்பு" என்று மீன் குஞ்சு வடிவத்தில் மச்சேந்திரர் கேட்ட தாரக மந்திரமே ஞானசர நூல் என்றும் கூறுவர்.

இதில் சரம்பார்க்க ஆசன விதி, சரம்பார்க்கும் மார்க்கம், போசன விதி, கருப்பக் குறியின் முறை, நாடிகளின் முறைமை முதலியவைகள் கூறப்பட்டுள்ளன.

கோரக்கர் இயற்றிய நூல்களாக இப்பொழுது நமக்கு கிடைப்பவை:

1. கோரக்கர் சந்திர ரேகை
2. கோரக்கர் நமநாசத் திறவுகோல்
3. கோரக்கர் ரக்ஷமேகலை
4. கோரக்கர் முத்தாரம்
5. கோரக்கர் மலைவாக்கம்
6. கோரக்கர் கற்பம்
7. கோரக்கர் முத்தி நெறி





8. கோரக்கர் அட்டகர்மம்

9. கோரக்கர் சூத்திரம்

10. கோரக்கர் வசார சூத்திரம்

11. கோரக்கர் மூலிகை

12. கோரக்கர் தண்டகம்

13. கோரக்கர் கற்ப சூத்திரம்

14. கோரக்கர் பிரம்ம ஞானம்

கோரக்கர் சித்தர் தனது தவ வலிமையால் தன்னுடைய சீடர்கள் இருந்த பல ஊர்களில் ஒரே நேரத்தில் சீவ சமாதி ஆனார் என்று கர்ணப் பரம்பரையாக செய்திகள் உள்ளன. அதன்படி கீழ்கண்ட ஊர்களில் அவர் சீவசமாதியானதாக தகவல்கள் உள்ளன.

1. பொதிய மலை. 2.ஆனை மலை

3. கோரக் நாத்திடல் (மானாமதுரை அருகே) 4. வடக்கு பொய்கை நல்லூர்

5. முகாசபரூர். 6. கோரக்கர் குண்டா (சதுரகிரி). 7. பத்மாசுரன் மலை

8. கோரக்பூர் (உத்தரபிரதேசம்)

இவற்றில் வடக்கு பொய்கை நல்லூர் மற்றும் முகாசபரூர் ஜீவசமாதிகள் பற்றி கோரக்கரே தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பொதிய மலை, ஆனைமலை சமாதிகள் பற்றி அறிய முடியவில்லை. கோரக்நாத்திடல் மானாமதுரை அருகே வந்தமனூர் என்ற இடத்தில் உள்ளது. அங்குள்ள கோரக்கர் சமாதிக்கு சித்ரா பவுர்ணமியன்று பொங்கலிட்டு படையல் செய்து வழிபட்டு வருகின் றனர். உத்தரப்பிரதேச மாநிலம் கோரக் பூரில் பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட கோரக்நாத் மந்திர் என்ற சமாதி கோவில் அமைந்துள்ளது.

கோரக்கர் சித்தர் 10ம் நூற்றாண் டுக்கு முன்பு வாழ்ந்தவர். தமிழ்நாடு முழுக்க பல இடங்களில் அவர் தவம் இருந்தார். அந்த இடங்கள் எல்லாம் தற்போது அவரது பெயரில் வழிபாட்டு தலங்களாக மாறி உள்ளன. என்றாலும், நாகை அருகே உள்ள வடக்கு பொய்கைநல்லூர் என்ற ஊரில் தான் அவரது ஜீவசமாதி ஆலயம் அமைந்துள்ளது. போகர் தனது நூலில் இந்த தகவலை மிக துல்லியமாக எழுதி வைத்துள்ளார்.

போகர் தானே முன்னின்று கோரக்கரை ஜீவ சமாதி செய்ததாக வரலாறு சொல்கிறது. ஆனால் அந்த

ஜீவ சமாதி இடம் நாளடைவில் மக்களால் மறக்கப்பட்டு மறைந்து போனது. சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு கோரக்கர் வடக்குபொய்கை நல்லூரில் தான் அடங்கி இருக்கும் இடத்தை ஒரு திருவிளையாடல் நடத்தி வெளிப்படுத்தினார்.

வடக்கு பொய்கை நல்லூரில் சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்னர் சிவநெறி வழுவாது, கடல் கடந்து கீழை நாடுகளுக்கு சென்று பெரு வணிகம் செய்து வந்த மஞ்சபத்து செட்டியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். தம் குலத்தில் பெண் ஒருத்தியை மணந்து இல்லறமாகிய நல்லறத்தை நடத்தி வந்த இந்த வணிகர் இவ்வூர் கடற்கரையில் வணிக நிலையம் ஒன்று அமைத்துக்கொண்டு கடல் வணிகத்தை சிறப்பாக நிகழ்த்தி வந்தார்.

சொந்தத்தில் இவருக்கு பாய்மரக் கப்பல்கள் பல இருந்தன. இவ்வணிகரின் துணைவியார் நாள்தோறும் உணவு சமைத்து தாமே, தம் கணவருக்கு அன்போடு உணவு படைத்து வரும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார். ஒருநாள் அம்மையார் தம் கணவருக்கு உணவு கொண்டு செல்லும்போது சிவனடியார் ஒருவர் எதிர்பட்டார்.

உடல்தளர்ந்து வாடிய முகத்தோடு எதிர்பட்ட அடியார் இந்த அம்மையாரை நோக்கி தம் பசி தீர உனவிடுமாறு வேண்டி நின்றார். மனமிரங்கிய அம்மையாரும் சிறிதும் தாமதியாது அடியார் பசித்துயர் தீர்ப்பதே பேரறம் என்ற நினைவோடு கொண்டு வந்த இலையை அவ் விடத்திலேயே விரித்து தம் கணவருக்கு கொண்டு சென்ற உணவை சிவனடி யாருக்கு படைத்தார்.

பசித்துயர் தீர்ந்த அடியார் அவ்வம் மையாருக்கு ஆசிகள் பல கூறி புறப் பட ஆயத்தமானார். அம்மையார் பாத்திரங்களை எடுத்துக்கொண்டு மீண்டும் உணவு கொண்டுவர இல்லம் நோக்கி நடக்கத் தலைபட்டார். சிவ னடியார் அவரைத் தடுத்து இப்பாத் திரங்களையும், இலையையும் எடுத்துக் கொண்டு உன் கணவர் இருப்பிடம் செல்! அவனுக்கு உணவு படை என்று கூறி அகன்றார்.

அம்மையாரும் அடியவர் சொல் வழியே கணவர் இருப்பிடம் சேர்ந்து கணவர் முன்னே இலையை விரித்து பாத்திரங்களை திறந்தார். என்ன வியப்பு! அவைகளில் உணவு குறைவற நிரம்பி இருந்தது!

அம்மையார் தம் வியப்பை வெளிக்காட்டாது கணவருக்கு உணவை படைத்தார். உண்ட கணவர் உணவு என்றும் இல்லாத சுவையாக இருப்பதை அறிந்து தம் துணைவியாரிடம் வினவ, அம்மையார் நடந்ததை நடந்தபடியே கணவனுக்கு எடுத்துரைத்தார். வியப்படைந்த மஞ் சுபத்து செட்டியார், தம் மனைவியையும் அழைத்துக்கொண்டு சிவனடியாருக்கு உணவளித்த இடத்திற்கு விரைந்தார்.

அங்கே சிவனடியாரைக் காண வில்லை. மணல் வெளியில் இரண்டு திருவடிகளின் சுவடுகள் மட்டுமே காணப்பட்டன. அருகில் உணவளித்த வணிகர் தம் துணைவியாரின் இரண்டு அடிச் சுவடுகளும் காணப்பட்டன. சிவனடியாராக எழுந்தருளி தம் துணைவியாரிடம் உணவு பெற்று உண்டு,

மீண்டும் பாத்திரத்தில் உணவு வரச்செய்தும் திருவிளையாடல் நிகழ்த்தி அருளியவர் சிவபெருமானே என உணர்ந்து மெய் சிலிர்த்தார் வணிகர். அவ்விடத்தை கூர்ந்து பார்த்த போது தான், சிவபெருமானின் திருவடிக்கு



கீழ் கோரக்கர் சித்தரின் ஜீவசமாதி இருப்பது தெரிந்தது.

சிவபெருமானைக் காணும் பேறு பெற்ற தம் துணைவியாரின் தவத்தை எண்ணி மகிழ்ந்தார். தமக்கு அக்காட்சி கிட்டவில்லையே என சிந்தை நொந்தார். இறைவன் இவ்வாறு சிவனடியார் திருக்கோலத்தில் எழுந்தருளி செட்டிகுலப் பெண்ணிடம் திருவமுது பெற்று உண்டது ஓர் ஐப்பசி திங்கள் பரணி நாளாகும்.

கடல் வணிகம் செய்து வந்த மஞ்சபத்து செட்டியார், திருவடிகளின் சுவடுகள் பதிந்திருந்த இடத்திலே ஒரு மேடை அமைத்து வழிபாடு தொடங்கினார். மக்கள் இந்த அருள் அற்புதம் கண்டு அதிசயமுற்றனர். திருவடிச்சுவடுகள் பதிந்திருந்த மேடையை மையமாக அமைத்து மஞ்சுபத்து செட்டியார் ஒரு ஆலயத்தை கட்டி முடித்து நாள்தோறும் நித்திய பூஜைகளுக்கு உரிய நிவந்தங்களையும் ஏற்படுத்தினார்.

வடக்கு பொய்கை நல்லூர் மக்கள் நாள்தோறும் சிறிது அன்னத்தை கொண்டு வந்து திருவடிகள் முன்வைத்து நைவேத்தியம் செய்து அடியவர்களுக்கு அளித்த பின்னரே தாம் உண்ணும் வழக்கத்தை மேற்கொண்டனர். நாளடைவில் சிவனடியார் ஒருவர் நாள்தோறும் தம் தோளில் அன்னக்காவடி ஒன்றை ஏந்தி மக்கள் இல்லந்தோறும் சென்று, அவர்கள் விரும்பி இடும் உணவை பெற்று வந்து சிவபெருமான் திருவடிகளுக்கு படைத்து அங்கே வந்து கூடும் ஏழை எளியவர்களுக்கு வழங்குவதை வழக்கமாகக் கொண்டார்.

வடக்கு பொய்கை நல்லூர் மக்களும் அன்னக்காவடிக்கு உண விட்ட பின்னரே உண்பர். உணவு படைக்கப்பெற்றமைக்கு அறிவிப்பாக திருக்கோவிலில் நகரா முழங்கப்பட்டு சங்கொலி எழுப்பப்படும். அவ்வொலி கேட்ட பிறகே மக்கள் உண்பர். ஆண்டு தோறும் ஐப்பசி பரணி நாளில் பெருவிழாவும் எடுத்து அன்ன தானத்தை சிறப்பாக செய்து வந்தனர்.

சில ஆண்டுகள் கடந்தன. ஒருமுறை வணிக நிமித்தம் மலேயா சென்ற மஞ்சுபத்து செட்டியார் ஐப்பசி பரணி வருவதை மறந்து போனார். ஆண்டுப் பெருவிழாவின் முதல் நாளன்றுதான் நாளை ஐப்பசி பரணி என்பது அவர் நினைவுக்கு வந்தது. சிந்தை நொந்து நாளைக்குள் வடக்கு பொய்கை நல்லூர் எவ்வாறு செல்வேன்! ஐப்பசி பரணி விழா தடைபட்டு விட்டதே என்று கலங்கி கண்ணீர் வடித்தார்.

கவலையில் கண்ணயர்ந்த செட்டியாரின் கனவில் சிவபெருமான் தோன்றி, அன்பனே! கவலை வேண்டாம்! உன் அன்பை அறிவோம்! நீ கண் விழிக்கும் போது வடக்கு பொய்கை நல்லூர் கடற்கரையில் உன் கப்பல் நிற்கும்! கரை சேர்ந்து வழக்கம் போல் ஐப்பசி பரணி விழாவை நடத்துக! ஆனால் நடந்தனவற்றை உன் மனைவி உள்பட எவரிடமும் கூறாதே!

கூறினால் உன் உயிர் பிரியும்! என்று கூறி மறைந்தார்.

திடுக்கிட்டு கண்விழித்த மஞ்சு பத்து செட்டியார் தம் கப்பல் கீழை கடற்கரைத் துறையில் தம் அலுவலகம் அருகே நிற்பதைக் கண்டு மெய் சிலிர்த்தார். கரையேறித் தம் இல்லம் சேர்ந்து மிகச்சிறப்பாக ஐப்பசி பரணிப் பெருவிழாவை அன்னதான பெருவிழாவாக நடத்தி மகிழ்ந்தார்.

விழா சீரும் சிறப்பு மாக நடந்தே றிய பின் ஒரு நாள் இல்லத்தில் அமர்ந் திருந்த மஞ்சு பத்து செட்டியார் சிவபெ ருமானின் கருணை திறத்தை நினைத்து ஆனந்த கண்ணீர் வடித்து தாமே சிரித்தார். அதனைக் கண்டு திடுக்கிட்ட துணைவியார் அவர் சிரிப்புக்கு என்ன காரணம் என்று கேட்டார். மஞ்சு பத்து செட்டியார் வேறுகாரணம் கூறிய போது நம்ப மறுத்த அம்மையார் உண்மையை மறைக்காது தம்மிடம் கூறுமாறு வற்புறுத்தினார்.

மஞ்சுபத்து செட்டியார் உண்மை கூறினால் என் ஆவி பிரியும் என்று கூறியும், அதற்கு உடன்படாத அம் மையார் கணவன் தம்மை அந்நியராக கருதி மறைப்பதாக கூறி வருந்தினார்.

இறைவன் தம் திருவிளையாடலை தம் துணைவி வழி நிகழ்த தொடங்கி யமையை சிந்தித்த மஞ்சுபத்து செட் டியார், இடுகாட்டில் சிதை அடுக்கி அதன்மேல் படுத்தவாறு உண்மை கூற முற்பட்டபோது துணைவியாரும் அவ்வாறே தமக்கும் ஒரு சிதை அடுக்கி அதன் மேல் படுத்தவாறு சிரிப்பின் காரணத்தை கேட்க துணிந்தார்.

இறைவன் நிகழ்த்திய திரு விளையாடலை மஞ்சுபத்து செட்டியார் தன் துணை விக்கு எடுத்துரைத்த உடனேயே அவர் ஆவி பிரிந்தது. கணவர் ஆவி பிரிந்தமை அறிந்த அம்மையாரும் உயிர் நீத்தார் இறைவன் உமையம்மையாரோடு எழுந்தருளி வந்து இவ்விருவருக்கும் திருக்காட்சி நல்கித் தம் திருவடிகளில் இவர்களை இணைத்துக் கொண்டான்.

மஞ்சுபத்து செட்டியார் கட்டிய திருக்கோவிலே தற்காலத்தில் கோரக்கர் சித்தர் ஆசிரமமாக திகழ்கின்றது என்றும் கருவறையில் காணப்படும் திருவடிகள் சிவபெருமானின் திருவ டிச்சுவடுகளே என்றும் மஞ்சுபத்து செட்டியார் துணைவியாரிடம் இறைவன் அன்னம் பெற்று உண்ட நாளே ஐப்பசி பரணி விழா நிகழும் நாள் என்றும் இவ்வூர் மக்களிடையே நெடுங்காலமாக ஒரு நம்பிக்கை நிலவி வருகிறது.



இதயத்திற்கு வலிமையையும் உடலுக்கு அழகையும் தரும் மணத்தக்காளி!

கத்தரி இனத்தைச் சேர்ந்ததாகும், மணத்தக்காளி. இச்செடியின் கீரை, தண்டு, காய், பழம் என அனைத்தும் சிறந்த சத்துணவாகும்.

இந்திய சித்த மருத்துவத்தில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது, மணத்தக்காளி. இதயத்துக்கு பலம் ஊட்டும் உயர்ந்தவகை சத்துணவாக மணத்தக்காளிக் கீரையும், இதன் பழங்களும் பயன்படுகின்றன.

இக்கீரை சத்துணவுப் பொருள் களைச் சரியாக வயிற்றுக்குள் அனுப் பிவிடுகிறது. இக்கீரையை உணவாகச் சாப்பிட்டால் அன்றைய தினம் நாம் சாப்பிட்ட உணவு ப்பொருள்களை நன்கு செரிமானம் செய்துவிடும். எந்த உறுப்பு எந்தப் பொருளைக் கிரகித்துக் கொள்ள வேண்டுமோ அதற்கு ஏற்ற வகையில் கொண்டுபோய்ச் சேர்க்கிறது.

கழிவுப் பொருள்கள், சிறுநீர் முதலியவை உடனே வெளியேறவும் வழி அமைத்துக் கொடுக்கிறது. நோய்களைக் குணமாக்கி உடல் நலத்தைப் புதுப்பித்துக் கொடுக்கிறது.

மனம் காரணம் இன்றிச் சில சமயங்களில் படபடக்கும். உடலுக்குள் குத்தலும் எரிச்சலும் இருக்கும். உடம்பில் வலியாகவும் இருக்கும. எதைக் கண்டாலும் இதனால் எரிச்சலும் உண்டாகும்.

இந்த நேரத்தில் மணத்தக்காளிக் கீரையைப் பருப்புடன் சேர்த்து மசியலாக்கிச் சாப்பிட்டால் உடல் உறுப்புகளும், மனமும் அமைதியடையும், மனத்திற்கு மகிழ்ச்சி உண்டாகும். அதுமட்டும் அன்றி உடல் உள் உறுப்புகளையும் மணத்தக்காளிக் கீரை பலப்படுத்தும்.

இக்கீரை உடலில் தோன்றும் வீக்கங்கள், கட்டிகள் முதலியவற்றை எதிர்த்துப் போரிடும். அவற்றைக் குணப்படுத்தியும் விடும். சிறுநீர்க் கோளாறுகளை நீக்கும். அத்துடன் சிறுநீர் நன்கு பிரியவும் வழி அமைத்துக் கொடுக்கும்.

மலச் சிக்கல் உளளவர்கள் இப் பழத்தைச் சாப்பிடலாம். இதனால் கழிவுகள் உடனே வெளியேறும்.

இக்கீரையிலும் நார்ச்சத்து அதிகம் இருக்கிறது. அதனால் மலச்சிக்கலை விரைந்து குணமாக்கும்

நீர்க்கோவை நோய் மகிச்சிறந்த முறையில் குணமாக இக்கீரை பயன்படுகிறது. இக்கீரையைக் கஷாயமாய் அருந்தலாம். அல்லது பருப்பு சேர்த்து மசியல், பொரியல் என்று சாப்பிடலாம்.

கீரையையும், இளந்தண்டுகளையும் சாறாக மாற்றி ஒரு வேளைக்கு ஆறு மில்லி வீதம் அருந்தலாம். மேற்கண்ட மூன்று முறைகளுள் ஏதாவது ஒன்றைப் பயன்படுத்தினாலும் நீர்க்கோவை நோய் விரைந்து குணமாகும்.

செரிமானக் கோளாறுகள் அனைத் தையும் மணத்தக்காளிக் கீரையின் இரசம் குணப்படுத்துகிறது. ஒரு கைப்பிடி அளவு சுத்தம் செய்யப்பட்ட இக்கீரையை மிக்ஸி மூலம் சாறாக

மாற்றுங்கள்.

உங்களுக்குப் பிடித்த பழ இரசப் பானம் ஒன்றுடன் இந்தக் கீரைச் சாற்றையும் சேர்த்து அருந்துங்கள். இந்தச் சாறு வயிற்றுப் பொருமல், பெருங்குடல் வீக்கம், வயிற்றுப் புண், வயிற்று வலி, குடல் புண், நாக்குப் புண், மூல வியாதி முதலியவற்றை விரைந்து குணமாக்கும்.

இக்கீரையை உண்டால் உடலுக்கு அழகு கூடும். இதயத்திற்கு வலிமை அதிகரிக்கும். வயிற்றுப் போக்கு, காய்ச்சல், குடல்புண் முதலியவற்றிற்கு உணவு மருந்தாகவும் இக்கீரை பயன்படுகிறது.

இரவு நேரங்களில் இக்கீரையை உணவுடன் உண்டால் களைப்பு நீங்கும். இத்துடன் நன்கு தூக்கத்தையும் கொடுக்கவல்ல தூக்க மாத்திரையாகவும் செயல்படும்.


மஞ்சள் காமாலையை இக்கீரையின் சாறு குணமாக்குகிறது. இதே சாறு கல்லீரலில் ஏற்படும் வீக்கத்தையும் தணிக்கிறது. கல்லீரல் கோளாறுகள் அனைத்தையும் இக்கீரைச்சாறு குணமாக்கும்.

எல்லா வகையான காய்ச்சல் களையும் இக்கீரை தணிக்கும். உலர்ந்த மணத்தக்காளிக் கீரையை (அல்லது கீரைப் பொடி என்றால் ஒரு தேக்கரண்டி) தண்ணீரில் கொதிக்க வைக்க வேண்டும். உடனே வடிகட்டி, சூட்டுடன் அருந்த வேண்டும்.

இது உடனே செயல்பட்டு நோயாளியை நன்கு வியர்க்கச் செய்து விடும். வயிர்வை வெளியேறுவதால் காய்ச்சலின் தீவிரம் குறையும். காய்ச்சல் குணமாகும்வரை இக்கீரையைச் சமையல் செய்து உண்ண வேண்டும்.

கீரையைப் போலவே பழமும் சக்தவாய்ந்த மருந்தாகும். ஆஸ்துமா நோயாளிகள் சளியுடன் 'கர்புர்' என்று சிரமத்துடன் மூச்சு விட்டுக் கொண்டு இருப்பார்கள். இவர்களும் காசநோயாளிகளும் இப்பழங்களைத் தினமும் சாப்பிடுவது நல்லது. மணத்தக்காளியின் காயும், பழமும் மிளகு அளவேதான் இருக்கும்.

நன்கு பசி எடுத்துச் சாப்பிடவும் இப்பழம் உதவுகிறது. புதுமணத்



தம்பதிகள் உடனே குழந்தை பெற்றுக் கொள்ள இப்பழம் போதும். இப்பழம் உடனே கரு தரிக்கச் செய்யும்.

உருவான கரு வலிமை பெறவும் இப்பழம் பயன்படுகிறது. பிரசவம் எளிதாக நடைபெறவும் பயன்படுகிறது. குழந்தை ஆரோக்கியமாய் உருவாகிச் சுகப் பிரசவமாக இப்பழம் ஒரு வரப்பிரசாதம் ஆகும். ஆண்கள் தாதுபலம் பெற இப்பழத்தை அவசியம்

சாப்பிட வேண்டும்.

தேமல், வீக்கங்கள், பருக்கள், கொப்புளங்கள் குணமாக இக்கீரைச் சாற்றைத் தடவலாம். உடலில் வலி உள்ள இடங்களிலும் வலிநீக்கும் மருந்து போல இக்கீரைச் சாற்றைத் தேய்த்து உடல் வலி நீங்கப்பெறலாம்.

நாள்பட்ட வியாதிகள் குணமாக இக்கீரைச் சாற்றை மோர், தயிர், பால், தேங்காய் தண்ணீர், இளநீர் போன்ற ஏதாவது ஒன்றில் சேர்த்துத் தினமும் அருந்த வரவேண்டும்.

மணத்தக்காளிக் காயை வற்றல் போடலாம். வற்றலிலும் மருத்துவக் குணங்கள் சிதையாமல் இருக்கிறது. காசநோய், ஆஸ்துமாகாரர்கள் தொந் தரவு இன்றி இரவில் அயர்ந்து தூங்க வற்றல் குழம்பு உதவும்.

மனத்திற்கு மகிழ்ச்சியைத் தந்து உடலில் உள்ள நோய்களையும் குணப்படுத்தும் இக்கீரையைத் தினமும் உணவில் உண்ணலாம்.

100 கிராம் கீரையில் ஈரப்பதம் 82.1%, புரதம் 5.9%, கொழுப்பு 1%, தாது உப்புகள் 2.1%, மாவுச்சத்து 8.9% உள்ளன. நோயைக் குணமாக்கி உடலின் கட்டுமானப் பகுதியைப் பார்த்துக் கொள்ள 410 மில்லி கிராம் கால்சியமும், மூளை வளர்ச்சி, மனத்திற்கு சுறுசுறுப்பு ஆகிய அளிக்க 70 மில்லி கிராம் பாஸ்பரஸும், நோய் எதிர்ப்புச் சக்தி அளிக்கும் 11 மில்லி கிராம் வைட்டமின் 'சி'யும் இக்கீரையில் உள்ளன.

மேலும், தசைகளுக்குப் பலம் சேர்ப்பதற்கும் கண்பார்வை தெளி வாய்த் தெரிவதற்கும் ரிபோஃபிலவின் என்னும் வைட்டமின் பி2ம், தலைவலி, தோல் நோய் முதலியவற்றைக் குணப்படுத்தி மனநலவளத்தை அதிகரிக்கும் 'பி' குரூப்பைச் சேர்த்த வைட்டமின் நியாஸினும் உள்ளன.

இக்கீரையையும், பழத்தின் விதைகளையும் உலர வைத்துப் பொடியாக்க வேண்டும். அவற்றைத் தலா அதைக் கரண்டி வீதம் காலையும் மாலையும் உட்கொண்டால் நெஞ்சுவலி குணமாகும். காய்ச்சல் நேரத்திலும், நாள்பட்ட புண்கள் இருந்தாலும் இதுபோல் உட்கொள்ள வேண்டும். இப்பொடியைத் தேன் கலந்தும் சாப்பிடலாம்.

மேற்கு ஆப்பிரிக்காவில் தோன்றி யது, மணத்தக்காளிக் கீரை, இதன் விஞ் ஞானப் பெயர், ஸோலனம் நைக்ரம் என்பதாகும். இப்போது உலகம் முழுவதும் இது பயிர் செய்யப்படுகிறது.

காரணம், குறைந்த செலவில் சிறந்த உணவாகவும் நோய்களைக் குணப்படுத்தும் மருந்துணவாகவும் இருப்பதால்தான்.

இன்றே, உங்கள் வீட்டில் மணத்தக் காளி விதையைத் தூவி இக்கீரையை வளர்க்க ஆரம்பியுங்கள், உடல் நலன் பெறுங்கள்.

வாழ்க வளமுடன்!
வாழ்க வையகம்!

சாயிமகராஜ் குருவைதேடி
இணையத்தில் படிக்க...
www.saidhyanalaya.org

சாய் தியானா
வாட்ஸ் அப் நம்பர்
99418 16692

இறையே துணை!

உங்களுடன் இருப்பதற்கு வெளிப்பொருளையோ, வெளியார் ஒருவரையோ நம்பியிருந்தால், அந்தத் துணை, எப்பொழுதும் உங்களுடன் இருக்க முடியாது. ஒருவர் உங்களுடன் என்றும் இருக்க விரும்பினாலும் அவராலும் முடியாது. நாம் தனியாக வருகிறோம், தனியாகவே போகின்றோம்.

வெளித் துணையை நம்பியிராதீர்! நீங்கள் எங்கே இருந்தாலும் உங்களின் சொந்த "ஆன்மா" உங்கள் அகத்தில் எப்பொழுதும் இருக்கும். அது உங்களின் அகத்திலும், புறத்திலும், முன்னும், பின்னும், மேலும், கீழும் இருக்கின்றது!

அதை உணர்ந்து கொண்டால் உங்களின் தனிமை உணர்ச்சிக்கு இடமேது? துர்பாக்கியவசமாக நாம் நம்முடன் இருப்பதற்கு புறப்பொருட்களையும், ஆட்களையும் நம்பியிருக்கின்றோம். வெளித்துணை நல்லதுதான். ஆனால் அதையே நம்பியிருக்காதீர்கள். அத்துணை வ்தாலும் நன்றே! வராமல் போனாலும் நன்றே!

வெளித்துணை உங்களிடம் வந்தால் அதை மறுக்க வேண்டியதில்லை.அது வரவிரும்பும் போது வரட்டும். போக விரும்பும் போது போகட்டும். அதற்கு அந்த சுதந்திரத்தைக் கொடுங்கள். ஏதாவது ஒன்றுடன் அல்லது யாராவது ஒருவருடன் ஒட்டிக் கொள்ள விரும்பினால் தொல்லைகள் வந்து சேரும். உங்கள் அகத்தில் இருக்கும் ஆண்டவனைத் தவிர வேறு ஒருவரும் உங்களுக்கு துணையாக இருக்க முடியாது. எனவே நீங்கள் தனியாக இல்லை என்பதை உணருங்கள்.

வாழ்கை வளமாக...

நிலத்தில் பயிரிட, முதலில் நிலத்தை பண்படுத்த வேண்டும். அதுபோல, நம்பிக்கையை வளர்ப்பதற்கு மனதை பக்குவப் படுத்த வேண்டும். ஞானிகளின் பொன்மொழிகளையும், மகான்களது போத னைகளையும், மனதில் விதைத்து அவைகளை உங்கள் வாழ்க்கையில் பின்பற்றுங்கள்



உழவர் நிலத்தில் பயிரிடும் முன் என்ன செய்கின்றார்? முதலில் நிலத்தில் இருக்கும் கற்களையும், குச்சிகளையும் பொறுக்கி எடுத்து மண்ணைப் பக்குவப்படுத்தி தரையை சமப்படுத்தி, உழுது, எருப்போட்டு, நீர் பாய்ச்சி, அதன் பின்னரே விதையை ஊன்றுகின்றார் அல்லவா?

அதைப்போன்றே நம் வாழ்க்கையிலும் நாம் அத்தகைய தயாரிப்பை செய்ய வேண்டும். அறநூல்கள், ஞானிகள், முனிவர்களிடம் இருந்து கற்ற கருத்துக்களே நல்ல விதைகளாகும். அவைகளை, பக்குவப்படுத்தப் பட்ட உங்களது மனதில் விதைத்து வளர்பீர்களாக! அவைகள் உங்கள் வாழ்க்கையில் வளமாக வளர்ந்து, உங்களுக்கும், மற்றவர்களுக்கும் பயன் படட்டும்.

காக்கும் தெய்வம்

ஷீரடி தர்பார். ஒருநாள் மாலைப் பொழுது துனி கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்க, பாபா தனது இருக்கையில் அமர்ந்து கொண்டு,

உற்சாகமாக பாடினார், "ரமதே ராம் ஆவோஜி! ஆவோஜி! உதியாங்கி

கோனியா லாவோஜி! லாவோஜி! (ஓ விளையாட்டு ராமரே, வாருங்கள்!

வாருங்கள்! மூட்டை, மூட்டையாய் உதியை தாருங்கள்! தாருங்கள்!)

அளவில்லா உற்சாகத்துடன் லயித்துப் பாடினார். நம்மை ஆட்கொள்ளவந்த அற்புத தெய்வம் ஸாயிநாதன்.

ஜாம்நேரில் உள்ள நானா சாகிப் சாந்தோர்கர் வீட்டில் நிலமை சரியில்லை. நானாசாகிப் மீளாத் துயரில் ஆழ்ந்திருந்தார். அவரின் மகள் நிறை மாத கர்ப்பிணி. பிரசவ வலி வந்தும் ஒரு வாரமாக பிரசவம் ஆகவில்லை. சிக்கலுக்கு மேல் சிக்கல். திறமையான மருத்துவர்களும், மருத்துவச்சிகளும் கைவிரித்து விட்டார்கள்.இன்னும் 24 மணி நேரத்தில் பிரசவம் ஆகவில்லை என்றால் தாய்சேய் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்றும் உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்றும் கூறிவிட்டனர்.



சாயியே தெய்வம் என்று நம்பிய நானா சாகிப், சாயி, சாயி, சாயி என்று குமுறினார். உன்னைத் தவிர எனக்கு வேறு கதி இல்லை என்று உருகினார். எனது பெண்ணை இந்த இக்கட்டில் இருந்து எப்படியாவது காப்பாற்றுங்கள் சாயி என்று மனமுருக வேண்டுகோள் வைத்தார்.

ஆனால் ஷீரடியில் சாயி மிக உற் சாகமாக காணப்பட்டார்.மசூதியில் அமர்ந் திருந்த ராம்கீர்புவாவை அழைத்து, அவரின் கை நிறைய உதியை கொடுத்து, கூடவே ஷாமாவிடம் ஆரத்தி பாடல்களை காப்பி எடுக்கச் சொல்லி அதையும் அவர் கையில் வைத்து, நீ ஜாம்வேர் வரை சென்று, இவைகளை நானா சாகேப் சாந்தோக்கரிடம் கொடுத்து வா, என்றார்.

ஆனால் புவா சீரடியில் இருந்து அருகில் உள்ள கந்தேஷ் என்ற ஊருக்குச் செல்ல வேண்டியிருந்தது. அதற்கு தேவையான பணம் இரண்டு ருபாய் மட்டுமே அவரிடம் இருந்தது. எனவே அவர் பாபாவிடம், "சாயி! என்னிடம் இரண்டு ரூபாய்கள் தான் உள்ளது. அது ஜாம்நேர் வரை செல்லப் போதாது என்றார்,

அதற்கு பாபா "ஹே ராம்கீர்! என்னை நம்பு. உனக்கு கடவுள் கொடுப்பார் உன் பயணத்திற்குண்டான வேறு ஏற்பாடுகள் செய்யப்படும் சென்று வா!" என்றார்.

சாயியின் வாக்கை யாரால் மீற முடியும்? உடனே புறப்பட்டார் புவா.

அதிகாலை இரண்டரை மணி, ஜல்காம் வந்தடைந்தது இரயில். அங்கிருந்து ஜாம் நேர் செல்லவேண்டும். கும்மிருட்டு, கடும் குளிர். பாபாவை நம்பி இங்கு வந்தோமே, இந்த இரயில் நிலையத்தில் என்னைத்தவிர ஒருவரும் இறங்கவில்லையே! இங்கிருந்து நானாசாகேப் வீட்டிற்கு எப்படி போவது என்றவாறே கழிவிரக்கம் கொண்டு யோசிக்கத் தொடங்கினார் புவா.

அப்போது இருட்டில் "இங்கு யார் ராம்கீர்புவா?" என்றது ஒரு குரல். குரல் வந்த திசையை நோக்கினார் புவா,

ஆஜானுபாகுவாய் ஒரு வாலிபர்! நேர்த்தியான உடை, நேர்த்தியான பார்வை கொண்ட அவர் புவாவிடம் வந்து "வாருங்கள் ஐயா! பாபாதானே உங்களை அனுப்பி வைத்தது. நானா சாகிப் உங்களை அழைத்து வரச்சொன்னார்" என்றார்.

புவா ஏதும் பேசாமல் அவரின் பின்னால் சென்றார். இரட்டை குதிரை வண்டி தயாராக இருந்தது. புவா வண்டியில் ஏறிக்கொள்ள சிட்டாய் பறந்தது குதிரை ஒண்டி. சற்று நேரத்தில் ஜாம்நேர் வந்த வுடன், வண்டியை நிறுத்தி, நதியில் நீராடி சிற்றுண்டி உண்டு வெளியே வர, அங்கே வண்டியும் இல்லை, ஆளும் இல்லை. இதென்ன மாயம்!

முன்னும் பின்னும் பார்க்க, சரியாக நானா சாகிப் வீட்டுக்கு முன்பாக வந்தி ருந்தார் புவா. வீட்டிற்கு அருகே நெருங்க, நெருங்க வீட்டிற்குள் இருந்து மரண



ஓலம். பிரசவம் ஆவ தில் சிக்கலுக்குமேல் சிக்கல். நானா பரிதவித்துக் கொண்டு அங்கும் இங் கும் வீட்டிற்குள்ளேயே அலைந்து கொண்டிருக்கின்றார். பெற்ற மகள் கஷ்டப்படுகின்றாள். என்ன செய்வதென்று அறியாமல் பதட்டத்தின் உச்சத்தில் இருக்கின்றார்.

அந்த வேலையில் உள்ளே நுழைந் தார் ராம்கீர். "ஐயா! நான் ராம்கீர் புவா, ஷீரடியில் இருந்து வருகிறேன். பாபா அனுப்பி வைத்தார். இந்தாருங்கள் உதி. அத்துடன் ஆரத்தி பாட்டையும் கொடுக்கச் சொன்னார் என்று கொடுக்க, நானா சீரடி இருக்கும் திசையை நோக்கி தக்க சமயத்தில் அபயம் வழங்கிய பகவான் சாயிநாதரை நோக்கி தலைக்குமேல் கைகூப்பி வணங்கினார்.

உடனே பெண்ணுக்கு உதியை தண்ணீரில் கலந்து குடிக்க கொடுத்து விட்டு, அனைவரும் ஆரத்தி பாட்டு பாடி ஆரத்தி எடுத்து சாயிநாதரிடம் தன் பிரார்த்தனையை சமர்ப்பிக்க, ஒரு வாரமாய் இழுத்துக் கொண்டிருந்த,



மருத்துவர்களால் கைவிட்டப்பட்ட பிரசவம் சுகப்பிரசவம் ஆனது. தாயும் பிழைத்தார்.

மனம் மகிழ்த நானா. "ராம்கீர்! மகத்தான காரியம் செய்தீர்கள்" என்று பாராட்ட, அதற்கு ராம்கீர், நான் என்ன பெரிதாக செய்து விட்டேன் அய்யா? பாபா உதி கொடுத்தனுப்பினார். திக்கு திசை தெரியாத எனக்கு இந்த ஊருக்கு வர நீங்கள் ஜல்காமிலிருந்து வண்டியை அனுப்பி என்னை அழைத்துக் கொண்டீர்கள் எனக்கொன்றும் கஷ்டம் இல்லை." என்றார் புவா.

இதைக் கேட்ட நானா துணுக்குற்றார் என்ன சொன்னீர்கள்? நானா? வண்டியா? அப்படி எதையும் நான் செய்யவில்லையே? பாபா உதி அனுப்பியதே எனக்கு தெரியாதே? என்றவாறே அவரும் மற்றவர்களும் அந்த வண்டியையும், வண்டிக்காரனையும் ஊர் முழுக்க தேடினார்கள். ஊர் எல்லை வரை வண்டியையும் காணோம், வண்டிக்காரனனையும் கணோம்.

அப்போது தான் உறைத்தது ராம் கீருக்கு. "ஹே ராம்கீர்! என்னை நம்பு. உனக்கு கடவுள் கொடுப்பார் உன் பயணத்திற்குண்டான ஏற்பாடுகள் செய்யப் படும் சென்று வா!" என்றாரே சாயி.

எல்லாம் அறிந்தவர் சாயி! சகலத்திற்கும் ஆதாரமானவர் சாயி! சாயியின் சேவையை செவ்வனே செய்தால் சாயி நம்மை கலங்காமல் காப்பார் என்பதனை அழுத்தம் திருத்தமாக உணர்ந்தார் ராம்கீர்புவா.

நாம் உணரும் நாள் எந்நாளோ!

சாயியை பணிவோம்! சகல நன்மைகளையும் பெறுவோம்!

MAS மஞ்சு அசோசியேட்ஸ்

G/A- 232, உணவு தானிய மார்க்கெட், கோயம்பேடு, சென்னை 107.
போன்: 044 24793822 / 23, 9382163822.
E-mail : kamaraj2306@gmail.com

* எங்களின் சேவைகள்

வங்கி கடன்கள்

- வீட்டுக்கடன்
- அடமானக்கடன்
- வியாபாரக்கடன்



LIC
STAR Health Insurance

இன்சூரன்ஸ்

- LIC & STAR

வருமான வரி தாக்கல்

- டேக்ஸ் ஆடிட்
- NON டேக்ஸ் ஆடிட்



சிறந்த முறையில் செய்து தருகின்றோம்.

மக்கள் சேவையில் 18 வது ஆண்டு..

வாடிக்கையாளர்களுக்கு நன்றி!

எங்கள் நிறுவனத்திற்கு வாடிக்கையாளர்களை அறிமுகப்படுத்தி வாழ்நாள் முழுவதும் வருமானம் பெறலாம். விபரங்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளுங்கள்!

ஜி.கே.ரேகேயின் நினைவலைகள்

நான் இந்தூரில் தாசில்தாராக பணி செய்து ஓய்வு பெற்றவன். 1912 ல் நான் இடுப்பு பிடிப்பால் மிகவும் அவதிப்பட்டேன். அடிக்கடி காய்ச்சலும் வந்து என்னை பாடாய்ப்படுத்தியது. என்னால தூங்கவோ, ஓய்வெடுக்கவோ, முடியவில்லை. ஆகவே நான் ஹர்தா அருகில் உள்ள ஜிக்காம் என்ற கிராமத்தில் இருந்த என் மாமனார் வீட்டிற்குச் சென்றேன்.

என் மாமனார் தீவிர சாயி பக்தர். நான் அவரிடம் சென்ற அன்று சாயி பாபாவின் உதியை எனக்கு இட்டுவிட்டார். அன்றே பிற்பகல் இரண்டு மணிக்கு நான் கட்டிலில் படுத்திருக்கும் போது காவி கட்டிய சன்யாசி ஒருவர் என்னருகே வந்து என் தோள்களில் தட்டி, " குழந்தாய் கவலைப்பட வேண்டாம். இன்னும் மூன்று தினங்களில் நீ குணமடைவாய். என்று கூறினார்.

நான் உடனே, ஒரு சன்யாசி வந்திருப்பதாகவும், அவர் கூறியதையும் கூறி என் மாமனாரைக் அழைத்தேன். அவர் அந்த சன்யாசியை காண விரும்பினார். ஆனால் அவர் வருவதற்குள் சன்யாசி சென்று விட்டார். அது சாயிபாபாவகத்தான் இருக்க வேண்டும் என உறுதியாக அவர் கருதினார்.

அன்றிலிருந்து சரியாக மூன்றாவது நாள். நான் வியப்புறும் வகையில் என் வலி முழுமையாக குணமடைந்தது. நான் பூரணமாகக் குணமடைந்தேன். என் மாமனார் சீரடிக்குச் சென்று பாபாவை தரிசிக்குமாறு என்னிடம் கூறினார்.

ஆனால் அதன் பின் இரண்டு வருடங்களாக என்னால் சீரடிக்கு செல்ல முடியவில்லை. 1914 ஆம் ஆண்டில் மண்டலாவில் என் மூன்றாவது பெண்ணின் திருமணத்திற்காக நான் விடுமுறை எடுத்துக் கொண்டேன். பாபாவிற்கு நாங்கள் திருமணப் பத்திரிக்கை அனுப்பி வைத்தோம். அதற்கு பாபாவிடம் இருந்து, நான் நேரில் வந்து திருமண்ததில் பங்கு கொள்வேன் என்று பதில் வந்தது.

திருமண விழா நடந்து கொண்டிருந்தபோது, பாபாவிடம் இருந்து உதியுடன் ஒரு கடிதமும் வந்தது. திருமணத் தம்பதிகளுக்கு உதியை இட்டுவிடும் படி அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அன்றைய தினத்திலேயே, ஒரு பக்கீர் வந்து ஒரு பைசா கேட்டார். ஆனால் என் மாமனார் அந்த வாய்ப்பை உதாசீனம் செய்து விட்டு பின்னால் வருந்தினார்.

அந்த பக்கீர் பாபாகத்தான் இருக்க வேண்டும் என்று என்னிடம் கூறினார். அது பாபாவேதான். ஆனால் அவர் மீண்டும் வருவார் என நான் கூறினேன். மறுநாள் வேறொரு பக்கீர் ஒருவர் வந்து என்னிடம் ஒரு பைசா மட்டுமே கேட்டார். நான் அதைக் கொடுத்தேன். அதை மட்டும் பெற்றுக்கொண்ட பக்கீர்

என் மாமனார் அளித்த விருந்தை ஏற்காமல் சென்று விட்டார்.

திருமணம் முடிந்த உடன் நான் சீரடிக்குச் சென்று அங்கு நான்கு நாட்கள் தங்கினேன். என்னைப் பார்த்தவுடன் பாபா, "ஏன் இவ்வளவு தாமதம்?" எனக்கேட்டார். அதற்கு நான் ஏழ்மை குமாஸ்தா என்றும், எளிதில் வர இயலாது என்றும் பதிலளித்தேன். அவர் என்னிடம் தட்சிணை கேட்டார். நான் ஐந்து ரூபாய் அளித்தேன். அவர் மேலும் ஐந்து ரூபாய் வேண்டும் என்று கேட்டார். அது ஏன் என்று எனக்குத் தெரியாது. ஆயினும் மேலும் ஐந்து ரூபாய் தட்சிணை அளித்தேன்.

அப்போது பாபா, உன்னிடம் இருந்து வரவேண்டிய பாக்கிகள் ஏதுமில்லை என்றார். சீரடியில் இருந்து என் வீட்டிற்கு திரும்பிய போதுதான் அதற்குண்டான விளக்கம் எனக்குத் தெரிந்தது. என் மனைவி எனக்குத் தெரியாமலே பாபாவிற்கு காணிக்கையாக ஐந்து ரூபாயை மணியார்டர் செய்திருக்கிறாள். அது பின்னர் நேரில் பெற்றுக்கொள்ளப் படும் என்ற குறிப்புடன் திரும்பி வந்து விட்டது. பாபா நேரில் அதிகமாக ஐந்து ரூபாய் பெற்றுக்கொண்டது அதனால்தான்.

நான்கு வயதான என் கடைசிப் பிண் பிரேமாபாய்க்கு காய்சல் வந்து நிலமை கடுமையாகி விட்டது. அவள் எலும்பும், தோலுமாகி விட்டாள். மருந்துகளும், சிகிச்சைகளும் பலன ளிக்கவில்லை. பாபாவின் பக்தையான என் மனைவி, குழந்தைக்கு உதவும்படி பாபாவிடம் பிரார்த்தித்தாள்.

அவள் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கும் போதே," மூன்றாம் நாள் எல்லா கஷ்டத்தையும் அகற்றி விடுவேன்" என்ற பாபாவின் குரலைக் கேட்டதாகக் கூறினாள். மூன்றாம் நாள் தாயின் மடியிலேயே எங்கள் பெண் குழந்தை உயிரை விட்டது எங்களுக்கு வியப்பளித்தது.

ஆபீசில் இருந்த எனக்கு என்





மனைவி தகவல் அனுப்பினாள். உடனே வீட்டிற்கு வந்த நான், என் பெண் இறந்து விட்டதைக் கண்டேன். என் மனைவி அழுது கொண்டிருந்தாள். நான் குழந்தையை தூக்கி மடியில் இருத்தி, பாபாவின் உதியுடன் சேர்த்து கங்கா நீரை ஓரளவு வாயில் ஊற்றினேன். நீர் வெளியே வழியவில்லை. ஆகவே நான் மேலும் சிறிது நீரைப் புகட்டினேன். அப்போது குழந்தையின் கண்கள் திறந்தன.

அவள் உயிருடன் இருப்பது உறுதியாயிற்று. அதன் பிறகு அவளுக்கு தொடர்ந்து உதியும் தீர்த்தமும் அளித்தோம். ஒரு மாதத்தில் அவள் பூரண ஆரோக்கியம் பெற்றாள்.

இப்போது திடகாத்திரமாக இருக்கும் அவள் இந்தூர் பள்ளி ஒன்றில் தலைமைச் செவிலியராக பணிபுரிகின்றாள்.

1926 ஆம் ஆண்டு என் மனைவி காலமானாள். அதன்பின் என் உடல் நிலைப் பாதிக்கப்பட்டது. என் முன் பாபாவின் புகைப்படத்தை வைத்திருந்தேன். அதையே பார்த்துக்கொண்டிருந்தேன். சற்று நேரத்தில் அதில் இருந்து ஒரு குரல் வருவது போன்றிருந்தது. "இனியும் வேலைக்குப் போக வேண்டாம்" தொடர்ந்து மூன்று நாட்கள் இந்தக் குரல் கேட்டது. பேசியது யாராக இருக்கும் என என்னால் கண்டுபிடிக்க முடகயவில்லை.

என் நண்பர் மருத்துவர் பர்னேர்கர், அந்தக் குரல் கண்டிப்பாக பாபாவுடையதாகத்தான் இருக்க வேண்டும் என்று கூறினார். ஆகவே நான் 1926 ல் ஓய்வுதியத்துடன் பணியில் இருந்து ஓய்வு பெற்றேன்.

அதற்கு முன்பு எனது நான்காவது

பெண் மீனாபாய்க்கு மணம் முடிக்க வேண்டும் என்று முயற்சி செய்தேன். வரன் எதுவும் கிடைக்கவில்லை. நான் ஏற்கனவே அலுவலகத்தில் விடுமுறை எடுத்துக் கொண்டேன். மத்திய பிரதேசத்தில் உள்ள என் என் மைத்துனர் வீட்டிற்கு நானும் என் மனைவியும் சென்றோம்.

அங்கு போய் சேர்ந்த மூன்றாவது தினம், "ஜீராப்பூருக்கு போ" என்றொரு குரல் கேட்டது. நான் உடனே இந்தூருக்கு திரும்பினேன். ஏற்கனவே அலுவல் நிமித்தம் என் மகனுக்கு ஜீராப்பூர் போக உத்தரவு வந்தும் அவனது மனைவி ஒன்பது மாத கர்ப்பிணியாக இருந்ததால் அவனால் போக முடியவில்லை.

அப்போது ஓர் அதிசய சம்பவம் நிகழ்ந்தது. நான் இந்தூருக்கு வந்தவுடன் என்னை ஜீராப்பூருக்கு மாறிறியதாகவும் நான் உடனே ஜீராப்பூருக்கு செல்ல வேண்டும் என்றும் என் அலுவலகத்தில் இருந்து கடிதம் வந்திருந்தது. ஆகவே நான் ஜீராப்பூருக்கு சென்று வேலையை ஒப்புக்கொண்டேன்.

அங்கிருந்து நான் வேலை விசயமாக இர் வாரங்களுக்கு டூர் செல்ல வேண்டியிருந்தது. நான் ஸயாத் என்ற ஊரில் தங்கினேன். அங்கே குவாலியர் சமஸ்தானப் பணியில் என் சகோதரர் இருந்தார். நான் அவர் வீட்டுக்குச் சென்றேன். அங்கே அவருடன் பலவந் என்ற ஒருவரைக் கண்டேன். அவர் உண்மையில் பலவானாக இருந்தார். பருமனாகவும் அழகாகவும் இருந்தார். நான் அவரைப் பற்றி விசாரித்ததில் அவர் என் மகளுக்கு பொருத்தமான வரன் எனக் கருதினேன். அது நிச்சய மாகி திருமணம் சிறப்பாக நடந்தேறியது.

இவ்விதம் என் வாழ்க்கை முழுவதிலும் சாயிபாபாவின் கருணை எனக்கும் என் குடும்பத்திற்கும் இருந்தது என்பதை பெருமையாக கருதுகின்றேன்.

விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

அன்பான சாயி சொந்தங்களே...உங்களது நிறுவனங்கள், கடைகள், தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.



முழுபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.2000

அரைபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.1000

முன் பின் அட்டை உள்பக்கம் கலர் ரூ.3000

பின் அட்டை கலர் ரூ.4000

தொடர்–19

ஸ்ரீராம்

மெய்ஞ்ஞானப்பாதை

எதை அடைந்தால் அதன்பின் அடைய வேறு உயர்ந்த பொருள் இல்லையோ, எந்த சுகத்தைக் காட்டிலும் வேறு உயர்ந்த சுகம் இல்லையோ, எந்த ஞானத்தைக் காட்டிலும் வேறு உயர்ந்த ஞானம் இல்லையோ அதுவே பரம்பொருள் என்று உறுதியாக அறிந்து கொள்ள வேண்டும்.

"ஆத்ம லாபத்திற்கு மேம்பட்டு எதுவும் கிடையாது" என்பதே இதன் விளக்கம்.

எதைப்பார்த்த பிறகு பார்க்க வேண்டிய பொருள் வேறு எதுவும் இல்லையோ, எந்த நிலையை அடைந்த பிறகு மறுபிறப்பு இல்லையோ, எதை அறிந்த பின்பு அறிய வேண்டியது எதுவும் இல்லையோ, அதை பிரம்மம் என்று உறுதியாக உணர்ந்து கொள்ள வேண்டும்.



பரப்பிரம்மத்தை பற்றிய அறிவே அனைத்திலும் மேலானது என்ற கருத்தே இறுதியானது. மண்கட்டி ஒன்றின் தன்மையை அறிந்தவன் மண்ணின் தன்மையை முழுமையாக அறிகின்றான். பலவிதமான மண்ணின் வேற்றுமைகளை நாம் பல பெயரிட்டு அழைத்தாலும், சத்தியமான பொருள் மண் மட்டுமே அல்லவா? அடிப்படை ஆதாரத்தை அறிந்தபின்பு அறிவதற்கு வேறு என்ன உள்ளது.

குறுக்கிலும், மேலும், கீழும் நீக்கமற நிறைந்துள்ளது சத், சித், ஆனந்தம். அத்வைதப் பொருள். வரம்பற்றது, நித்தியமானது, ஒன்றான பொருள், அதுவே பரப்பிரம்மம் என்று உறுதியாக அறிய வேண்டும்.

பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைகின்ற பரிபூரண ஆனந்தமே என்பதற்கு இவைதான் விளக்கம்.

வேதாந்திகளால் உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களும் அகற்றப்பட்ட பின்பு எஞ்சியிருக்கும் இரண்டற்ற பேரானந்தம், ஒன்றாகி எப்பொருளால் உணர்த்தப்படுகின்றதோ அதுவே பிரம்மம்.

பிரம்மத்தை எளிதில் சுட்டிக்காட்ட முடியாது. உணரத்தான் முடியும்.மனம், சொல் இவற்றால் கிரகிக்கப்படும் எதுவும் பரம்பொருள் அல்ல என்று உணர்த்தி மனதை அதீதத்திற்கு

எடுத்துச் செல்ல வேண்டும்.

ஒருவன் அனைத்தையும் சந்தேகிக்கலாம். தன்னைத் தானே சந்தேகிக்கலாமா? இவ்வார்த்தைகளை ஆழ்ந்து சிந்தியுங்கள்.

பரப்பிரம்மம் சிறியதன்று, பருமன் அன்று, குட்டையுமன்று, நீளமுமன்று, பிறப்பற்றது, அழிவற்றது, உருவம், குணம், நிறம், பெயர் எதுவுமற்றது, அதை பரப்பிரம்மம் என்று உறுதியாக அறிவாய்.

ஐம்பொறிகளின் துணை கொண்டு பரம் பொருளை அறியமுடியாது. மனதிற்கும், வாக்கிற்கும் அது எட்டாது. வேதங்கள் பிரம்மத்தை பலவாறாக விளக்கினாலும், வர்ணித்தாலும், பிரம்மத்தின் நிர்குண சொரூபத்தை விளக்கமுடியாமல் தடுமாறுகின்றன.

உலகத்தில் உள்ள எல்லாவற்றையும் மனிதனின் நாவினால் வர்ணித்து விட்டான். ஆனால் அவனால் வர்ணிக்கமுடியாத ஒன்றே ஒன்று பிரம்மம் மட்டுமே! எனவே எச்சில் படாத ஒரே பொருள் பிரம்மம் ஒன்று தான்.

எதன் ஒளியால் சூரியன் போன்றவை பிரகாசம் அடைகின்றதோ, அனால் எது இவற்றால் பிரகாசம் அடைவதில்லையோ, எதனால் அனைத்தும் ஒளிர்கின்றதோ, அதுவே பிரம்மம் என்று அறிந்து கொள்ள வேண்டும்.

பிரம்மம் உலகத்திற்கு மாறான இயல்பு கொண்டது. பிரம்மத்திற்கு அப்பாற்பட்டு வேறு எதுவும் கிடையாது. பிரம்மத்திற்கு வேறாக எதுவும் காணப்பட்டால் அது கானல் நீரைப் போன்று பொய் தோற்றமாகும்.

காலம், தேசம், காரண காரியத்திற்கு உட்பட்டது உலகம் என்னும் தோற்றம். இவை சத்தியமன்று. இவற்றிற்கு அப்பாற்பட்டது பிரம்மம். இதுவே சத்தியம். ஏனெனில் இங்கு பிரம்மத்தை தவிர வேறு ஒன்றும் கிடையாது. அஞ்ஞானிக்கு உலகமாகத் தோன்றுவதை ஞானி பிரம்மமாக காண்கின்றான்.

கானல் நீரின் உண்மையை உணராதவன் அதன் பின்னால் ஓடுவான். உண்மை உணர்ந்தவனோ, இது பொய் என்று அமைதியாக இருப்பான்.

பிரபஞ்சம் இருக்கின்றது என்றால் அது ஒரு நாள் கட்டாயம் மறைந்து போய்விடும். அதில் சந்தேகம் இல்லை. துவைதம் எல்லாம் மாயை வடிவமானது. பரமார்த்த பொருளோ அத்வைதமானது.

பிரம்மத்திற்கு வேறாக உலகைக் காண்பவர்கள் அருள் இல்லாதவர்கள். பட்டப்பகலை அவர்கள் இரவு என்று எண்ணி மயங்குவர். ஆனால் அருள் பெற்றோர், பார்க்கும் இடம் எல்லாம் அவர்களை ஆட்கொண்ட பெரிய பொருளின் மேலான நிலையையே காண்பர்.

காணப்படுவது, கேட்கப்படுவது, அனைத்தும் பிரம்மமே. ஞானம் அடைந்த ஒருவன், சத்சித் ஆனந்த மாகவே மாறி அத்வைத பிரம்மமாக ஆகின்றான்.

தங்கம் பல அழுக்குகளுடன் சேர்ந்து இருக்கும் போது அதன் மதிப்பு எவருக்கும் தெரியாது. அதை சுத்தம் செய்து நெருப்பில் காய்சி புடம் போட்டால் பளிச்சென்று திகழும். அதனுடைய இயல்பான பிரகாசத்தை மறைத்து வந்த அழுக்கு நீங்க வேண்டும் என்பதே அவசியம்.

அதைப்போன்று இயல்பாகவே உள்ள ஆத்ம சைதன்யம் பிரகாசம் அடைய மன அழுக்குகள் அனைத்தும் போக வேண்டும். அதை நீக்க நல்ல குருவை நாடிச் சென்று உபதேசம் பெற்று அந்தர் முகமாகத் தியானிக்க வேண்டும்.

கேட்டல், சிந்தித்தல்,தெளிதல், என்பவையே குருமுகமாக நாம் பெறும் விசாரணை மார்க்கம்.

காலைக்கதிரவன் எழுந்தான், இருள் அகன்றது என்பதைப் போல, அஞ்ஞான இருட்டைப் போக்க, ஆத்ம அறிவாகிய ஒளி பாய வேண்டும். தியானத்தில் ஆழ்ந்து அகத்தை நோக்கி மனதைத் திருப்பி உள் கடந்து சென்றுகொண்டே இருந்தால் முடிவில் தோன்றும் உள் ஒளியே ஆத்ம அறிவு.

இதயத்தில் வழிபடும் மூர்த்தி சோதி சொரூபமாய் பிரகாசித்துக் கொண்டிருப்பதை அனுபவத்தால் உணர வேண்டும். சாதகன் இந்த லட்சியத்துடன் பயிற்சி செய்ய வேண்டும்.

பல வழிகளில் மனதை நிலைநிறுத்த தியானம் பழகுவார்கள். நாசியின் நுனியில், புருவங்களின் மத்தியில், உச்சந்தலையில் சிந்தனையை நிலை நிறுத்த சாதனை செய்வார்கள். அனைத்திலும் சாலச்சிறந்ததும், தொந்தரவு அற்றதும் இதயஸ்தானத்தில் மனதை நிலை நிறுத்துவதே என ஆன்றோர்கள் கூறுகின்றனர்.

ஆத்ம அறிவு அகத்தே எழுந்த பின்பு வேறு கர்மங்கள் தேவையில்லை. ஞானி ஒருவன் தனது நித்திய கர்மங்களை விடலாகாது என்று ஒரு கருத்து நிலவுகின்றது. வெறும் சடங்குகளை அவர் தொடர்ந்து செய்யத் தேவையில்லை என்றும் கருத்தப்படுகின்றது.

சாதகன் வலிய அதை துறக்காது காலப்போக்கில் அதுவே நம்மை விட்டு விடுதல் சிறப்பாகும்.

நீங்கள் ஏன் நித்ய கர்மங்கள், சந்தியா வந்தனம் ஆகியவற்றை செய்வதில்லை என்று ஞானி ஒருவரை கேட்டபோது அவர் இவ்வாறு பதில் கூறினார்.

"என்னுடைய இதயத்தில் அறிவு சொரூபமான ஆத்மன் பிரகாசித்துக் கொண்டே உள்ளது. அது உதிப்பதும் இல்லை, மறைவதும் இல்லை. நான் எப்படி சந்தியா வந்தனம் செய்வேன்"?

திசை, இடம், காலம் ஆகியவற்றால் கட்டுப்படாது எங்கும் நிறைந்து, குளிர், வெப்பம், ஆகிய இருமைகளை அழித்து, நிலைத்த சுகத்தை தந்து, அழுக்குகளை அகற்றும் தன்மையுள்ள தனது ஆத்மன் என்ற புண்ணிய நதியைப் பூஜிப்பவன், எல்லாம் அறிந்த, எங்கும் நிறைந்த அமுத ரூபமான பிரம்ம நிலையை அடைகின்றான்.

புண்ணிய நதிகளில் நீராடுவது சிறந்த செயல் என சாதகர்களால் கருதப்படுகின்றது. அந்த வழக்கத்தை ஒட்டி, ஆத்ம ஞானத்தில் திளைக்கும் அனுபவமே மேலான புண்ணிய தீர்த்த நீராடல் ஆகும்.

எனவே யோகங்களில் சிறந்தது, தன்னை அறிதலே என்பதை நன்குணர்ந்து ஆத்மாவைப் பற்றிய அறிவில் திளைத்து அமுத நிலை பெற்றிட எல்லாம் வல்ல இறைவன் பகவான் சாயிநாதனை இறைஞ்சுவோம்.

வாழ்க வளமுடன்!

வாழ்க வையகம்!

நிறைவு.



ஓம் சாய்ராம்

"வாழ்வை வளமாக்கும் சாயி லிகித ஜபம்"

சாய் அன்பர்களே,



முயற்சி திருவினையாக்கும் என்பது வள்ளுவம். வாருங்கள் நாமும் இந்த லிகித நாம ஜெபத்தை ஊக்கத்துடன் முயன்று செயல்பாட்டில் ஆக்கம் காண்போம். சத்குரு சாய் மஹராஜ் திருவருளால் நம் வாழ்வில் மன அமைதியோடு கூடிய வெற்றியைக் காண்போம்.

நமது லிகித நாம ஜபம்
"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்"

நம் எல்லோருடைய இல்லங்களிலும், உள்ளங்களிலும் ஒளி ஒலி வீசட்டும். இதுவரை (30.11.20) 300 நாட்களாக தினமும் 108 முறை எழுதிவரும் நம் சாய் அன்பர்களுடன் இணைந்து சாய் மஹராஜ் திருவருள் பரிபூரணமாக நம்மை வழிநடத்த ப்ரார்த்திப்போம்.

'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'

தொடர்புக்கு;

சுந்தர்சாய், செல்: 9789404451

சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் தரிசிக்க இருப்பது, தான் வாழும் காலத்தில் சலவை தொழிலாளர்களுக்காக பாடுபட்ட ஒப்பற்ற சித்தர் ஸ்ரீ மதுரை சாமி சித்தர் சீவசமாதி தரிசனம்.

ஸ்ரீ மதுரை சாமி சித்தர் சீவசமாதி தரிசனம்

மதுரையிலிருந்து வந்த சாமியார் என்பதால், இந்தச் சித்தரை மக்கள் 'மதுரைசாமி' என்றே பெயர் சூட்டி அழைக்கலாயினர். அப்போது இந்த ஊருக்கு செம்பியம் கிராமம் என்று பெயர். இப்போது கோயில் இருக்கும் இடம் ஏரிக்கரை. இங்கு ஏரிக்கரையில் சலவைத் தொழிலாளிகள் துணி துவைப்பர், இன்னொரு புறம் செங்கல் சூளை வேலை நடக்குமாம்.

பகல் பொழுதில் ஊருக்குள் சென்று பிச்சை எடுத்து வருவதும் இரவு ஏரிக்கரையில் துணி துவைக்கும் இடத்தினிலேயே படுத்து உறங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தார் நம் சித்தர்.

மதுரை சாமி ஊருக்குள் சென்று வீடுவீடாக உணவை யாசகம்





கேட்டு வாங்கி வந்த உணவுகளை மொத்தமாக கிளறி சலவைத் தொழிலாளிகளை கூப்பிட்டு வரிசையாய் உட்கார வைத்து உணவு பரிமாறுவாராம். 'அக அழுக்கை அகற்றி ஆன்மாவை வெள்ளையாக்கு என குறியீடாய் சொல்லும் குடிமக்களே உண்பீர். உங்கள் பசியில் பகவான் இளைப்பாறுவார்' என்றபடியே தனது அன்னதான கடமையை தினந்தோறும் செய்வாராம்.


சாமியின் மதிப்பை புரிந்து கொண்ட அந்த ஏழை மக்களின் மூலம் மதுரை சாமியின் கீர்த்தி பரவத் தொடங்கியது. எல்லா பிரச்னைகளுக்கும் ஒரே தீர்வு தான் நம் சித்தரிடம். அது 'ஓம் நமச்சிவாயம்'தான். எல்லா வியாதிகளுக்கும் ஒரே மருந்து சிவ திருநீறுதான் என்று சிவ மந்திரத்தை சொல்ல வைத்து அவர்கள் சொன்னதும் திருநீறு அளித்து அவர்

நீக்கிய நோய்கள் ஏராளம். அவர் தீர்த்து வைத்த பிரச்னைகள் கணக்கிலடங்காதவை.

சித்தரின் விஷேச சக்திகளைக் கேள்விப்பட்ட மக்கள் வெகு தூரத்தில் இருந்தெல்லாம் அவரை தரிசிக்க வந்தனர். காலப்போக்கில் சிலர் சித்தர் அவர்களுக்கு சீடர்களாக மாறினார்கள்

ஒருநாள் தன் சீடர்களை அழைத்து "என்னை சிவன் அழைக்கிறான்.6 க்கு 6 குழி வெட்டுங்கள். நான் சீவ சமாதி அடையப் போகின்றேன். நான் குழியில் உட்கார்ந்ததும் துணி வெளுக்க பயன்படுத்தும் சாலை என் மேல் கவிழ்த்து மண்ணை





மூடிவிடுங்கள்" என்றாராம். அதனை உத்தரவாக ஏற்று அப்படியே செய்தார்கள் அவருடைய சீடர்கள்.

இன்று அது சிவன் கோவிலாகவும், மதுரை சாமி மடமாகவும், மதுரை சாமி சீவ சமாதியாகவும் அழைக்கப்படுகின்றது.

அவர் ஜீவ சமாதி அடைந்தது '1901ஆம் வருடம், பிப்ரவரி தமிழ் சார்வரி மாசி மீ 8 மங்கள வாரம் காலை அமாவாசை திதி, சதய நட்சத்திரம் கூடிய சுபதினத்தில்' என்று கல்வெட்டு குறிப்பு சொல்கிறது.

"ஏரிக்கரையோரம் சூளை தொழில் செய்துவந்த மு.வேலு நாயக்கர் என்பவர், தனது சூளையிலிருந்து கல்கொடுத்து 1906 ல் இந்தக் சீவ சமாதிக் கோயிலைக் கட்டினாராம்"

சென்னை செம்பியம் பகுதியில் எவ்வளவோ மழை, வெள்ளம், புயல் என பல இயற்கை சீற்றங்களை சமாளித்து கம்பீரமாக சிவலிங்க வடிவில் சித்தர் பெருமான் நமக் கெல்லாம் அருளாசி வழங்கிக் கொண்டிருக்கின்றார்.

வாழும் காலத்தில் நாம் நேரில் காண முடியாத சித்தரை அவர் சீவ சமாதி அடைந்த ஆலயத்தை தரிசனம் செய்து நம் வாழ்வின் கர்ம வினையின் வீரி யத்தை குறைத்துக் கொள்வோம்.

ஆலய முகவரி:

ஸ்ரீ மதுரை சாமி மடம்,மதுரை சாமி மடத்து தெரு,செம்பியம், பெரம்பூர், சென்னை - 11.

பெரம்பூர் வீனஸ் தியேட்டர் எதிரே உள்ள தெருவில் சென்று கடைசி இடது பக்கம் திரும்பினால் மதுரை சாமி மடத்துத் தெருவைக் காணலாம். அங்கு வலது புறத்தில் மடத்தின் பெயர் பலகையைக் காணலாம். அதுவே நம் மதுரை சாமி சித்தரின் சீவ சமாதி ஆலயம்.

பேருந்து மார்க்கம்:

கோயம்பேடு திரு.வி.க. நகர்.

இறங்குமிடம்:

வீனஸ் தியேட்டர்.
46G, 46B, 46C,46.

புகைவண்டி மார்க்கம்:

சென்னை கடற்கரை திருவள்ளூர்

இறங்குமிடம்: பெரம்பூர்

இங்கிருந்து ஷேர் ஆட்டோ மூலம் செல்லலாம்.

சித்தர்களின் சீவ சமாதியை தரிசிப்போம்!

சிக்கலின்றி வாழ்வோம்!

- (தொடரும்)

எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer:
Castrol | SERVO | MAK LUBRICANTS | Shell Lubricants | MOTUL | AMARON | SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES









GS Caltex
Castrol

P.Sivasaravanan B.E.,
9843440806

Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON
LASTS LONG, REALLY LONG.









HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், வீட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

S.Jayanthy,
17/7 **A**, *பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,*
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைனில் அனுப்ப:
S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு.கோபி குடும்பத்தார்.கோவை. ரூ.3000
திரு. பாலகிருஷ்ணன்.அண்ணாநகர்.ரூ.3000.
திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம். ரூ.2000.
திருமதி. இந்திரா வெங்கடாசலம். மந்தைவெளி.ரூ.1000.
திரு.திருஞானம் திலகம் குடும்பத்தார். டி.கல்லுப்பட்டி.ரூ.1000.
திருமதி. சுமதி ராமமூர்த்தி கொளத்தூர். ரூ.1000.
திருமதி.லெட்சுமி. மந்தைவெளி.ரூ.1000
திரு.எஸ்.சிவராமன்.பெரம்பூர்.ரூ.800.
திருமதி.உமா விஜய் ஆனந்த். அயனாவரம். ரூ.800.
திருமதி.சாந்தி.மந்தைவெளி.ரூ.500.



திரு.சாந்தமூர்த்தி குடும்பத்தார் போரூர்.ரூ.500.
திரு.வெங்கடாசலம்.டி.நகர். ரூ.500.
திருமதி.சுகன்யா. சென்னை. ரூ.500
திருமதி. மீனா.மேலக்கோட்டை.ரூ.500.
திரு. ஆர்.சுகன்யா.கொளத்தூர்.ரூ.500.
திருமதி.நித்யா ராஜேந்திரன். கூடுவாஞ்சேரி.ரூ.500.
திருமதி. வாழ்க வளமுடன் சுமதி. பெரியார் நகர்.ரூ.500.
திருமதி.பாக்கியவதி. ராணிப்பேட்டை. ரூ.400.
திரு.சீனிவாசராவ். நங்கநல்லூர்.ரூ.301
திருமதி.யாமினிபிரியா குடும்பத்தார்.அயனாவரம்.ரூ.300.
திரு.பத்ரி நாராயணன். நெய்வேலி. ரூ.300.
திருமதி.லலிதா.துரைப்பாக்கம்.ரூ.250.
திரு.விஜயன்.சி.சி.பேங்க் மேனேஜர்.பெரியார் நகர்.ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி. ஓய்வு.அசோக் லேலண்ட். கொளத்தூர்.ரூ.200.
திரு.குமரன் ஸ்டோர்ஸ்-டிராவல்ஸ். பெரியார் நகர்.ரூ.200.
திருமதி.உமா முருகன்.சின்னாளப்பட்டி. ரூ.200.
திருமதி.குமுதா. சின்னாளப்பபட்டி. ரூ.100.
திருமதி.பிச்சையம்மாள்.பெரம்பூர். ரூ.100.
திருமதி. வரலட்சுமி பிரபாகரன்.
அயனாவரம்.ரூ.100.
திருமதி.விஜயலட்சுமி.அயனாவரம் ரூ.100.
திருமதி.சாந்தி மோகன்.கிசீரி ரூ.100.
திருமதி.அபிராமிஅசோக் கிசீரி. ரூ.100.
திரு.மதன். அயனாவரம். ரூ.100.
திரு.மணிகண்டன்.கொளத்தூர்.ரூ.50
பாபா பக்தர்கள்.கொளத்தூர்.ரூ.50.
திரு.அகஸ்டின் குடும்பத்தார்.
குன்றத்தூர்.அரிசி.1 மூ



என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 150 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 400 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 1,500 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் முலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திரு.பாலையா. திருநெல்வேலி.ரூ.1000.
திருமதி.சூர்யா. புழல். ரூ.500.
திரு.எஸ்.சிவராமன்.பெரம்பூர்.ரூ.500.
திருமதி.ஜெயலட்சுமி தேவக்குமார். பெரவள்ளூர்.ரூ.200.
திரு.வேணுகோபால்.நங்கநல்லூர்.ரூ.100
திரு.கார்த்திகேயன். வடலூர்.ரூ.100.

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.400/ மட்டும் செலுத்தி சந்தாதாரராகுங்கள்!

ரூ.501/மதிப்புள்ள அறிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"

* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.



* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: 501/ மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.